# திராவிடநாடு

8—6—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## எங்கள் நாடு

—[ ரவி ]—

பாரெங்கும் பண்பாடு வளராத நாளிற்
    பல்கலைகள் வளம்பெற்றே திகழ்ந்ததென் நாடு;
சீரெங்கும் பெருகிடவும் திறனெங்கும் மேவித்
    திராவிடத்தில் அறிவுடனே வாழ்ந்தனரெம் முன்னோர்
வீரங்கொள் திறத்தினிலே ஏறுகளாய் வாழ்ந்தார்;
    விரிகடலிற் கலமோட்டி வாணிபமும் செய்தார்;
போரதனிற் புண்பட்டும் புறங்காட்டி மாண்டும்
    புவியிழப்பர் பகைவர்தாம் எம்மவரின் முன்னால்.

பண்பாட்டில் தொல்புகழில் பாவளர்ச்சி தன்னில்
    பாராளும் முறைதன்னில் சீரான நாடு;
எண்கணக்கில் நல்லறிவில் வானக்கோள் ஆய்வில்
    இருங்கணித வல்லோர்கள் வாழ்வதுமென் நாடு;
பெண்மக்கள் பாவலராய் இலக்கியங்கள் ஆக்கும்
    பெற்றிதனுக் களவுண்டோ? பிறப்புதனை நீக்கி
விண்புக்கு வாழும்வழி விளக்கமுடன் கூறும்
    வித்தகர்கள் மருத்துவர்கள் விளங்குகின்ற நாடு.

புத்துணர்ச்சி மிக்குண்டு பொதுநாட்ட முண்டு;
    பூரித்த தோளுடையோர் எம்நாட்டில் உண்டு;
இத்துணையாம் அறிவுவழி இன்பவழி நாட்டில்
    எஞ்ஞான்றும் கற்றோர்கள் அறிவிழந்த தில்லை:
எத்தர்கள் சிலபேரால் சற்றுவளம் இழந்தோம்
    இனியெங்கள் திட்டத்தால் வளம்செழித்துப் பொங்கும்
புத்துலக கவிஞர்கள் அறிஞர்வாழ் நாட்டில்
    பூத்திடும் இன்பத் திராவிடம் விரைவில்!

# பாரிஸ் லீலா!

— பழநி —

வெண்டைக் காய் வேண்டுமா, கத்தரிக்காய் இதோ, புதிதாகப் பறித்த புடலங்காய் சாமி, என்று போட்டி போட்டுக்கொண்டு கூவுகிறார்கள்; சந்தையில். அழுகிப் போன தக்காளியை வைத்துக் கொண்டிருக்கும் கடைக்காரிகூட 'அருமையான தக்காளி' என்று சொல்லுகிறார். இது நல்லதா, இது புதியதா என்று பொறுக்கிப் பார்த்து, தேவையானதை வாங்கிக்கொண்டு திரும்புகிறோம்! கடைக்காரி சொல்கிறாள் என்பதற்காகவோ, கடைக்காரனின் சாதுர்யத்தை மெச்சியோ, எதையும் நாம் எடுத்துவிடுவதில்லை. தேவையையும், சரக்கின் தரத்தையும் மதிப்பிட்டே வாங்குகிறோம்!! திடீரென ஒரு நாளைக்கு, ஊராளும் சர்க்கார் உத்திரவொன்று போடுகிறதென வைத்துக்கொள்ளுங்கள் — "இன்று முதல் எல்லோரும் கத்தரிக்காயைத்தான் வாங்கவேண்டும். மீறினால், ஆறு மாதம் தண்டனை" என்று. என்ன செய்வோம்? இதென்ன சர்க்கார், சர்வாதிகார சர்க்காராயிருக்கிறதே என்போம்! குமுறலும் கொந்தளிப்பும் ஏற்படும்!!

* * *

கடைக்குச் செல்பவனுக்கு எப்படி தன் விருப்பப்படி கறி காய்களைப் பொறுக்க உரிமையிருக்க வேண்டுமோ, அதைப்போல ஒரு நாட்டில் வாழும் மனிதனுக்கு தன் விருப்பப்படி 'அரசு'களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையிருக்க வேண்டும் என்பதுதான், ஜனநாயகத் தத்துவமாகும். நாட்டைப் பொதுவுடைமையாக்குவோம் எனலாம் ஒரு கட்சி; அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட அழகான கொள்கைகள் — இதை ஆதரியுங்கள் என்று இன்னொன்று சொல்லலாம்; பூணூலை விடாதீர் பொழுதெல்லாம பஜனை செய்வீர் புது வாழ்வு மலரும் என்று முழக்கமிடலாம் இன்னொரு கட்சி; இதில் எது தேவை, எது சொல்வதை ஏற்றால் நன்மை கிடைக்கும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டும் என்றுரைப்பதே, ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும்.

இந்த "ஜனநாயகம்" எனும் சொல்லைப் பெற, மக்களாட்சி எனும் மாண்புறு புதுமையைக் காண, நடத்தப்பட்டிருக்கும்

## அண்ணால்

போராட்டம் மிக மிகப் பெரிது. வல்லான் வகுத்ததே வழி! மன்னன் விருப்பமே மகேசன் கட்டளை! —என்று இருந்த நிலை மாறி, மக்களின் எண்ணங்களே ஒரு நாட்டை ஆளவேண்டும் என்பதற்காக நடைபெற்ற இரத்தக் களரிகள் மிகப் பெரிதாகும். நாகரிகம் வளராத நாட்களிலே, வல்லவன், தலைவனானான். அவனுக்குத் தெரிந்த சட்டத்தை அவன் அடக்கியாண்டான். அவனது புஜபல பராக்கிரமத்தைக் கண்டு, மாற்றார் மருண்டனர்; உற்றார், முழங்காலிட்டுத் தொழுதனர். பிறரது படையெடுப்பினின்று தங்களைக் காக்கவும், தங்கள் தேவைக்கான பொருள்கள் கிடைக்கும்படிச் செய்யவும், மன்னனிருக்கிறான் என்று மக்கள் கருதினர்.

மன்னனுயிர்த்தே மலர் தலையுலகம், என்று எண்ணப்பட்டது. அப்படிப்பட்ட மன்னன், நல்லவனாகயிருந்தால், நாடு வாழ்ந்தது. தீயவனாக யிருப்பினோ, தீமைகள் மலிந்தது. மதுவும் மங்கையுமே வாழ்வெனக் கருதி, வசூலிக்கப்படும் வரிகளை யெல்லாம் கொட்டி அழித்துவிட்டு, களஞ்சியம் காலி எனறபோது, புதுப் புது வரிகளைப் போட்டு, கட்டாதாருக்கு கிட்டி கட்டி, 'தர்பார்' நடத்திய போது, மக்கள்விழித்தனர். அந்த விழிப்பிலிருந்து, விளைந்ததொரு சொல்தான், மக்களாட்சி! ஜனநாயகம்!!

*

இந்த "மக்களாட்சி முறை"க்கு வித்திட்டு, வியர்வை சிந்திய இடம் **இங்கிலாந்து** எனலாம். மன்னனுக்குப் பதில், மக்களின் பிரதிநிதிகள் அமர்ந்து ஆட்சி செய்யும் "**பார்லிமெண்டரி முறை**" உருவானதும், உயிர் பெற்றதும், பிரிட்டனில்தான் என்பர். பார்லிமெண்டுகளின் தாய், என்று சொல்லப்படும் அங்கு, மன்னன் வசமிருந்த அதிகாரங்களை மக்கள மன்றம் கைப்பற்றுவதற்கு, நெடுங்காலமாயிற்று.

13-வது நூற்றாண்டில் ஜான் என்பான் இங்கிலாந்தை ஆண்டு கொண்டிருந்தான். விருப்பம் போல் அவன் ஆண்டான். வேதனை தாளாத பிரபுக்கள் ஒன்றுகூடி, ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படிச் செய்தனர். இதுவரை, மகேசனின் தூதனென்றும், தன் வார்த்தையை

(4-ம் பக்கம் பார்க்க)

# திருவாசகம்!

[16] ஆண்டு சந்தா ரூ. 8 [8—6—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 47

"காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் இரட்டை வேஷம் போடுகிறார்கள். ஒருபுறம் கருப்புச் சட்டைகளுடன் கைகோர்த்து நின்றுகொண்டே மறுபுறம் காங்கிரசில் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைவிட்டு இவர்கள் வெளியேறுவது நல்லது"

ஒரு திங்களுக்கு மேலாயிற்று இத்திருவாசகத்தைச் செப்பி! கடந்த ஏப்ரல் 23-ந் தேதி மதுரை மாநகரில் பேசியபோது, காங்கிரஸ் தலைவர் தேவர் தான் இவ்வண்ணம் கர்ச்சித்தார்.

ஒரு திங்கள் பொறுத்துப் பார்த்தோம் — தேவரின் குரல் கேட்டு யாராவது வெளியேறுகிறார்களா என்று, ஒருவர்கூட வரவில்லை!

தேவர், காங்கிரசின் தலைவர். தமிழ் நாட்டுக் காங்கிரசில், 'இரட்டை வேஷம்' போடுவோர் யாரார் என்பது அவருக்குத் தெரியாமலிருக்க முடியாது. தெரிந்ததால்தான், பேசியிருக்க வேண்டும். ஒரு திங்களாயிற்று, ஒருவரும் விலகியதாகவும் காணோம்—தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வெளியேற்றியதாகவும் விபரம் இல்லை!

அப்படியாயின், இரட்டை வேஷம்' போடுபவர்கள் எவருமே இல்லையா? ஒருவருமே இல்லையென்றால், தேவர் பேசிட வேண்டிய அவசியமில்லை; பேசியதும், காமராசரோ, இராசாராமோ மறுத்தாவது இருக்கவேண்டும். இவர்களும் மறுக்காததால், தேவரின் கூற்றுச் சரியென்றே ஆகிறது. இருந்தும் எவரும் வெளியேறவில்லை! எந்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை!!

ஒரு மாதமாகிவிட்டதே, ஒருவரும் வெளிவரவில்லையே என்பதைக் கண்டு, தேவராவது, இன்னின்னார் திராவிட கழகத்தவர்கள் என்று சுட்டிக்காட்டி, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் காங்கிரசைப் பரிசுத்தப்படுத்தியிருக்க வேண்டும். அவரும் செய்ததாகவோ செய்யப்போவதாகவோ அறிகுறியில்லை. ஆயினும், மதுரையம்பதியில், இவ்வாறு பேசினார்—இரட்டை வேஷம் போடுகிறார்கள் என்றார்! திராவிட கழகப் பற்றுடனும், காங்கிரஸ் போர்வையுடனும் இருக்கிறார்கள் என்றார்-அதுவும் பொதுக்கூட்டத்தில்!!

மக்கள் மத்தியில், ஏதோ இப்படிப்பட்டவர்கள் இருப்பதால்தான், பால் கெட்டுவிட்டது பருக முடியாமற் போய்விட்டது, இல்லையெனில் காங்கிரசைப் போன்றதொரு கட்சியிருக்க முடியாது என்று பேசலாம். தங்களது பத்தினித்தனத்தை மெய்ப்பிக்கவும் முயலலாம். ஆனால், சொன்னதை, செயலாக்கிக் காட்டினால்தான் தூய்மை எனும் சொல்லுக்கு மதிப்புண்டு. கட்சிக் கட்டுப்பாடு, எனும் வார்த்தைக்கும் அர்த்தமுண்டு. ஆனால், தேவர், பேசினார்—போய்விட்டார்—அவ்வளவுதான்!!

திராவிட கழகப் பற்றும், பெரியார் மீது பாசமும் கொண்டோர் பலரிருக்கலாம், காங்கிரசில். அப்படிப்பட்டவர்களை ஏன், தேர்தல் காலத்தில் சேர்த்துக்கொண்டார்கள்? அவர்களுக்கெல்லாம் தேர்தல் 'டிக்கட்' கொடுத்தது, தேவரின் வசமுள்ள பார்லிமெண்டரிக் குழுதானே. அப்போது, பேசாதிருந்துவிட்டு, காங்கிரஸ் சீரழிகிறதென்றதும், 'அங்கேயிருக்கும் இவர்களெல்லாம் உத்தமர்கள் போலவும், யாராரோ சேர்ந்ததால்தான் கெட்டு வருவது போலவும், பழியையும் இழி சொல்லையும் போடுவது அழகுமல்ல; ஒழுங்குமல்ல.

தேவர் இப்படித் தூற்றுகிறாரே, நமக்கேன் வீண் பழி என்று, காங்கிரசில் 'இரட்டை வேடம்' போட்டுலவுவோர், ஒருநாளும் போட்டுக்கொண்டுள்ள புதுக் கதர்ச் சட்டையினைக் கழட்டிடப் போவதில்லை. ஏனெனில், கதரை மாட்டியபோதே, அவர்கள் "கட்சி" என்பதைத் துறந்துவிட்டவர்களாகும்! அவர்களுக்குக் கட்சியைவிட, பதவியும் பவிசுமே பெரிது!—அப்படிப்பட்டவர்கள், தேவரின் திருவாசகம் கேட்டு, திரும்பிவிடமாட்டார்கள் ஒருபோதும்.

கொள்கை உறுதியில்லாத, வேடம்போடுபவர்களை, நுழையவிட்டபோதே காங்கிரஸ் கெட்டுவிட்டது. அதை அனுமதித்துவிட்டு, இப்போது தேவர் ஏன் இப்படிப் பேசவேண்டும்? பேசி, ஒரு திங்கள் ஆகியும், அதுபற்றி எவ்வித சிரத்தையும்

கொள்ளாதவராக இருக்கவேண்டும்—கேள்வி எழத்தான் செய்யும், மக்கள் மனதில்.

ஒருவேளை, அப்படி நடவடிக்கையெடுத்தால், காமராசர் போன்றோருக்கே சிட்டுக்கிழிக்கப்படும் சிக்கலான நிலைமை வரும் எனும் மயக்கமோ? அல்லது, என்ன காரணமோ?—என்பதைத் தேபரிடமிருந்து அறியும் ஆசை, தமிழ் நாட்டுக்கு இருக்கிறது. ஏன் எனில், வந்த அவர், இந்தப் பிரச்னையை எடுத்துப் பேசிக் கர்ச்சித்திருக்க வேண்டியதில்லை! வேறு எவ்வளவோ பேசியிருக்கலாம்!! ஆனால், பேசிவிட்டு இப்போது பேசாமடந்தையாக இருப்பது, பாரதியாரின், "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி, வஞ்சனை சொல்வாரடி கிளியே! வாய்ச் சொல்லில் வீரரடி!!", என்னும் வரிகளையே நினைவூட்டுகிறது.

வாய்ச்சொல் வீரம், பலனளிக்காது! காங்கிரசில் புது மலர்ச்சி உண்டு பண்ணவேண்டுமெனும் பெரிய தலைகளான தேபர் போன்றவர்களே வாய்ச் சொல் வீரர்களாக உள்ளனரெனின், அந்தக் கட்சிக்கு உயிரூட்ட யாரே உள்ளனர்? எவரால்தான் இயலப் போகிறது!!

—OO—

2-ம் பக்கத் தொடர்ச்சி

தட்டி நடக்க எவரும் இல்லையென்றும் கருதி வந்த மணிமுடிதாரிகளின் பிடரியிலே கைவைத்த முதல் ஒப்பந்தமாகும் இது. "மாக்னகார்ட்டா" என்று சரித்திரத்திலே பெருமையோடு சொல்லப்படும் இந்த முதல் ஒப்பந்தத்தில் 1215-ம் ஆண்டில் கையெழுத்திட்டான் ஜான் மன்னன்! ஐரோப்பாவிலேயே, ஒரு மறுமலர்ச்சியை உண்டுபண்ணிய ஒப்பந்தம் இது.

**மனம்போல் ஆளலாம் மன்னன் என்கிற பழமைக்கு எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டது, இதன் மூலம்.**

**மன்னனின் விரலசைவே சட்டம் என்பது மாறி, மக்களின் குரலே சட்டம் என்கிற கட்டம் உருவாயிற்று.**

ஜானுக்குப் பிறகு, இப்படிப் பட்ட மக்களின் தூதுவர்கள் நிரம்பிய ஒருசபை கூடி, ஆளும் மன்னனின் அதிகாரங்களையும், அவனுக்கு ஆண்டுச் செலவுக்கு எவ்வளவு ஒதுக்கலாம் என்பதையும் முடிவு செய்யலாயிற்று. இப்படி முடிவு செய்யக்கூடியவர்களில், பிரபுக்கள் முதலிடம் வகித்தனர்! ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் ஒரு சிலர் பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டார்கள்!! முதலிடம் வகித்த பிரபுக்களுக்கென ஒரு சபையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கென இன்னொரு சபையுமாக "ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்" "ஹௌஸ் ஆப் காமன்ஸ்" என்று இரு சபைகள் ஏற்படலாயின. இப்படி, மன்னனின் நடவடிக்கைகளை மக்கள் கட்டுப்படுத்த முயன்றனர். மன்னர்களில் தெம்பும் பிடிவாதமும் கொண்டவர்களோ, மக்கள் பிரதிநிதிகளை மடக்கித் தமது பழைய உரிமையையும் ஆதிக்கத்தையும் நிலைநாட்ட முயன்றனர். அப்படி முயன்றவர்களில் ஒருவன் முதலாம் சார்லஸ்! அவனுக்கும் மக்களுக்குமிடையிலே ஏற்பட்ட போராட்டத்தின் முடிவில், சார்லஸின் சிரம் போயிற்று, பிடிவாதக்காரனை அவனை, தூக்கு மேடையிலே நிறுத்தி, சிரத்தை வெட்டினர் மக்கள்.

இவ்விதம் பெரும் பெரும் போராட்டங்களுக்கு இடையிலே தான், "மக்களாட்சியின் விதை" ஊன்றலாயிற்று. இங்கிலாந்து என்று மட்டுமல்ல, எங்கெங்கு மன்னராட்சி இருந்ததோ அங்கெல்லாம் இந்த எண்ணம் அரும்பி, படிப்படியாக மக்களின் கைக்கு அதிகாரம் வந்து சேர பல நூற்றாண்டுகளாயிற்று.

பிரிட்டனில் சார்லஸ், பிரான்சில் லூயி, ரஷ்யாவில் ஜார் போன்ற மன்னாதி மன்னர்கள், மணிமுடியை மட்டுமின்றி, அந்த மணிமுடியைத் தரித்திருந்த தலைகளையுமே இழக்கலாயினர்! மக்கள் தமது குரலொலியே சட்டமாக இருக்க வேண்டுமெனும் புதுமைத் தாகம் மலர்ந்தது—வளர்ந்தது-வாகையும் சூடிக்காட்டிற்று!!

✱

மன்னனிருக்கட்டும் நாட்டை ஆள நாம் பார்லிமெண்டை வைத்துக்கொள்ளலாம். என்றன சில நாடுகள். மன்னனுக்குப்பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட "குடியரசுத் தலைவர்கள்" இருக்கட்டும் என்றன சில நாடுகள். "குடியரசுத் தலைவன் என்று ஒன்று எதற்கு? எவன் வல்லவனாயிருக்கிறானோ, அந்த வல்லவன் ஆளட்டும்", என்று கருதின சில. இப்படி, பல விதமான அரசு முறைகள் உலக அரங்கில் ஏற்படலாயின. இந்த முறைகளில், மக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசுத் தலைவன், மக்களின் சபையின் உதவி கொண்டு ஆளும் முறையினை அமெரிக்கா போன்ற நாடுகள் ஏற்றுக் கொண்டன! மன்னனைப் பெயரளவில் வைத்துக்கொண்டு ஆளும் வழியினை இங்கிலாந்து, ஹாலந்து போன்றவைகள் இன்னும் வைத்துக் கொண்டிருக்கின்றன! குடியரசுத் தலைவரும் இருப்பார்—பார்லிமெண்டும் இருக்கும்—அப்பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்ட மந்திரிசபைதான் ஆளும் என்கிற முறையினை இந்தியா இலங்கை போன்றவைகள் ஏற்றுக் கொண்டுள்ளன! ரஷ்யாவிலும், செஞ்சீனாவிலும் நடைபெறும் அரசுமுறை ஒருவிதமாகும்!-இப்படி, மன்னனே ஆள்வது என்கிற நிலை மாறி, மக்கள் மன்றத்துக்கு அதிகாரம் வந்துவிட்டது, கடந்த சில நூற்றாண்டுகளில்.

முடியரசு (Monarchy), வல்லவர்கள் ஆட்சி (Oligarchy), செல்வர்கள் ஆட்சி (Plutocracy), மக்கள் ஆட்சி (Democracy), எனும் புதுச் சொற்கள், அரசியல் அகராதியில் ஏற்படலாயின.

இப்படி மக்கள் மன்றத்துக்கு அதிகாரம் வந்த பிறகு, ஏற்பட்ட ஒரு புது வியாதிதான் "சர்வாதிகாரம்" (Dictator Ship) என்பது! "ஏமாந்த காலத்தில் ஏற்ற கொண்டோன்-புலிவேஷம் போடுகின்றான்—பொதுமக்களுக்கு புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?", என்று கவியரசர் பாடியதுபோல, மக்கள் மத்தியிலே ஏதோ ஒரு காரணத்தால் செல்வாக்குப் பெற்ற ஒருவன், அந்த செல்வாக்கைக் கொண்டு நா[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

# ஒரே, ஒருவராவது!

**ஒருவராவது தேவையாம்!**

**ஊழியர் ஒருவராவது வேண்டுமாம்!!**

**கட்சி வேலைகளுக்குத் தனது முழு நேரத்தையும் செலவிடும் மனப்பான்மையுள்ள ஊழியர் ஒருவராவது தேவையாம்!!!**

*

நாட்டுக்குச் சேவை செய்ய வீட்டுக்கொருவரைக் கேட்கவில்லை—வீதிக்கு ஒருவராவது தேவை எனச் சொல்லவில்லை—ஊருக்காவது ஒருவர் கொடுங்கள் என்று கூறவில்லை — தாலுகாவுக்கு ஒருவர் என்றும் செப்பவில்லை—மாவட்டத்துக்கு ஒருவர், ஒரே ஒருவராவது தேவை என்கிறார். **மாவட்டத்துக்கு ஒருவராவது!** — என்கிறார்; ஒருவர் என்பதற்கும் ஒருவராவது என்பதற்கும் இடையே அப்பப்ப, எவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஒருவராவது தேவை, என்று அவர் சொல்லும்போது, அவர் உள்ளத்தில் எழுந்தடிக்கும் உணர்ச்சி அலைகள் தெரியாமலில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டாரோ, எத்தனை தடவை பெருமூச்சுகளை விட்டாரோ யாமறியோம; ஆனால் மிகமிக வேதனையுடனேயே அவர் இந்த அறிவிப்பைக் செய்திருக்க வேண்டும்.

**"ஜில்லாவுக்கு" ஒருவராவது தேவை!**—என்கிறார். அவர்கள், கட்சி வேலைகளுக்காக முழு நேரத்தையும் செலவிடும **மனப்பான்மையுள்ள**வர்களாக இருக்கவேண்டுமாம். கட்சி வேலைக்காக முழு நேரத்தையும் நான் செலவிடுகிறேன், எனக்கு அது கொடுங்கள் இது கொடுங்கள், ஆறுபத்து சம்பளம் போதும், நாளுக்கு நாலு ரூபாய் 'பேட்டா' போதும் என்று வேலையில்லாத இக்காலத்தில் பலர் வரக்கூடுமல்லவா? அதனைத் தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேதான், "மனப்பான்மை"யுள்ளவர்கள் அகப்படுவார்களா என்று கேட்கிறார்!!

அன்றொருநாள் அந்நியனை விரட்டப் போராட யார் வருவீர், என்று காங்கிரசுக் கட்சி குரல் எழுப்பியபோது, கோடி கோடியாகக் கூடினர்! பதவியிலிருந்தோர், பதவியை விட்டெறிந்தனர்—வக்கீல்கள் உதறித்தள்ளினர் பட்டத்தை — வியாபாரிகள் விட்டு வந்தனர் பணப்பெட்டியை — மாணவர்கள் வகுப்பறையை விட்டு நேரே சிறைக்கூடம் நோக்கிச் சென்றனர்—தொழிலாளிகளின் காதுகளில் மோகன கீதமாக ஒலித்தது அந்த அழைப்பு—பட்டினத்தார், பட்டிக்காட்டார் எல்லோரும் 'இதோ! இதோ!' என்று வந்தனர்—செக்கிழுத்தார் சிதம்பரனார்--மூத்திரச் சட்டியைத் தூக்கவேண்டும், அதிலேதான் கஞ்சியை ஊற்றிக் குடிக்கச் சொல்வார்கள் என்பது அறிந்தும் அணிவகுப்பு பெருகிற்று—தெருவிலே அடிபட்டு வீழ்ந்தான் திருப்பூர் குமரன் — தில்லையாடி வள்ளியம்மை, துப்பாக்கிக்கு மார்பு காட்டினார்—ஆறு ஆண்டுகள், ஆயுட்காலம், எனறெல்லாம் தண்டனை விதிக்கப்பட்டபோதும் அஞ்சவில்லை — 'ஐஸ்' பெட்டியில் வைத்துக் கொடுமைப்படுத்தினர் ஜயப்பிரகாஷ் நாராயணை, அவர் காங்கிரசுக்குச் செய்யும தியாகம் எனறு இருந்தார்—தூக்குமேடைகள் காட்டப்பட்டன, பஞ்சாப் படுகொலைகள நிகழ்த்தப்பட்டன, சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன — எனினும, ஒருவரல்ல, இருவரல்ல, ஆயிரமல்ல, பத்தாயிரமல்ல, இலட்சக்கணக்கில் திரண்டனர்! தியாகத் தீயில் குளித்தனர்! காங்கிரஸ் முழக்கிய முழக்கத்தில், உண்மை இருந்தது. அந்த உண்மை, அனைவரையும், இழுத்தது. மக்களுக்கான நன்மையைச் செய்திடும் ஒரு கட்சிக்கு ஆள்தேடும் கட்டம்—அதுவும் ஒரு மாவட்டத்துக்கு ஒருவராவது கிடைப்பாரா என்கிற நிலைமை--நிச்சயம் ஏற்படாது.

எனினும் இவர் கேட்கிறார், வேதனையுடனேயே வெளியிடுகிறார், ஒருவராவது தேவை என்று. முழுநேரத்தையும் அவர் கட்சி வேலைக்கு செலவிடும் மனம் உள்ளவராயிருக்க வேண்டுமாம்!! கிடைப்பவருக்கு அப்படிப்பட்ட "மனம்" இருக்கிறதென்பதை, "ஸ்கேல்" வைத்து அளந்து பார்ப்பாரா, "எடை" போட்டு நிறுத்துத் தீர்மானிப்பாரா என்று தெரியவில்லை. அப்படிப்பட்டவராக யிருக்க வேண்டுமாம்—அந்த ஊழியருக்கு இன்னொரு நிபந்தனையும் இருக்கிறது—அது, அவர் **எவ்வித பதவியையும் விரும்பாதவராக இருக்க வேண்டும் !!**

"இதென்ன விந்தையாக உள்ளதே! அரசியல் பணியிலீடுபட, 'மனம்' வேண்டும் என்கிறார்—அடுத்தபடி 'பதவியை அவர் விரும்பக்கூடாது' என்கிறார். ஆர்வமும், தியாகசுபாவமும் இருந்தால்தானே, அவருக்கு அரசியல் ஊழியர் எனும் பெயர் பொருந்தும. யாரிது இப்படி ஆள் தேடுவது—பொப்பிலியா, பெத்தாபுரமா, டாடாவா, பிர்லாவா, இந்து மகாசபையா," என்று கேட்கத் தோன்றலாம் தோழர்களுக்கு. வேதனையுடனேயே தெரிவித்துக் கொள்கிறோம், இப்படி அறிவிப்பைச் செய்வது வேறு எந்தக் கட்சியுமல்ல! காங்கிரஸ் !!

"காங்கிரசா?", என்று திகைப்பதும், திருப்பூர் குமரனும் செக்

இழுத்த சிதம்பரனும் தில்லையாடி அம்மையும் இருந்த காங்கிரசா என்று வியப்புடன் கேட்பதும், தெரிகிறது நமக்கு—ஆமாம், தோழர்காள், அப்படிப்பட்ட கட்சியில்தான் மாவட்டத்துக்கு ஒருவராது தேவை—எனும் நிலை!! **பதவியாசை அற்றவராக — உண்மையாகப் பாடுபடுபவராக** ஒருவராவது இருப்பாரா என்று கேட்கப்படுகிறது!!

எப்பேற்பட்ட கட்சி, இன்று எப்பேற்பட்ட கதிக்கு ஆளாகி இருக்கிறது? குரல் கேட்டால், ஊரே கிளம்பிய காலம் இருந்தது! விரல் நீட்டினல், துப்பாக்கிகள் ஆயிரம் இருபபினும், பாய்ந்திடும் படை வரிசைகள் ஏராளம் இருந்த கட்சி அது!! ஒருவராவது தேவையாம்—'ஜில்லா'வுக்கு ஒருவராவது தேவையாம்—அவருக்குப் பதவியாசை கூடாதாம்-அவர் உண்மை ஊழியராக இருக்க வேண்டுமாம்—தெரிவிக்கிறார், **லால்பகதூர் சாஸ்திரி.**

மார்தட்டிப் பேசும் காமராசரும்' உரத்து முழக்கமிடும் சுப்ரமணியமும், ஊருக்கு ஒன்று சொல்லும் பக்தவத்சலமும், ஏசல் நடை பேசும் பட்டாளமும், இன்ன பிறவும் "எமக்கு நிகர் யாரே! எமது காங்கிரசைப்போல் ஒரு கட்சியுண்டோ!!", என்று பெருமை பேசுகிறார்களல்லவா, அவர்கள் எல்லாம் வாழும் தமிழகத்துத் தலைநகராம் சென்னையில்தான், லால்பகதூர், கடந்த மே 22-ந் தேதியன்று இவ்விதம் தெரிவித்திருக்கிறார். அதுவும், காங்கிரஸ் காரர்களைக் கூட்டிவைத்து, அவர்கள் மத்தியில்தான் இவ்விதம் கேட்டிருக்கிறார்!!

லால்பகதூர், டில்லியில் மந்திரி' என்பது மட்டுமல்ல, நேருவுக்கு மிக மிக நெருங்கியவராம். காங்கிரசை தாங்கியிருக்கும் பெரிய தூண்களில் ஒருவராகக் கருதப்படுகிறவர். தேபருக்குப் பதில், அகில இந்தியக் காங்கிரசுக்கு இவரையே தலைவராக்கினல் என்ன என்று நேரு போன்றார் நினைக்குமளவுக்கு 'இடம்' பெற்றிருப்பவர். அவர்தான், இவ்விதம வெளியிட்டிருக்கிறார்; ஏடுகள் எல்லாம், விடாமல், போட்டிருக்கின்றன.

**"......எவ்வித பதவியையும் விரும்பாத, காங்கிரசின் உண்மையான பிரதிநிதி எனக் கருதத்தக்க, கட்சி வேலைகளுக்கே தனது முழுநேரத்தையும் செலவிடும் மனப்பான்மையுள்ள காங்கிரசு ஊழியர் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவராவது தேவை......"**

ஆயிரம், நூறு என்று சொல்லவில்லை, ஒருவராவது தேவை எனக் கேட்கிறார். கேட்டுவிட்டு, "அப்படி ஒருவர் கிடைத்தால் கூடப் போதும். காங்கிரசைக் காப்பாற்றிவிடலாம். ஆனல்..." என்று மேலும் தெரிவித்துள்ளார், அக்கூட்டத்தில்.

**"........இதுபோன்ற ஊழியர் இன்று காங்கிரசில் ஒருவர்கூட இல்லை என்பதை நினைக்கும்போது மனம் பெரிதும் வேதனைப்படுகிறது."**

கர்ஜிக்கிறார் காமராசர்! நீங்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்கிறார் சுப்ரமணியம்!! இதோ, லால்பகதூர், இன்றுள்ள காங்கிரசைப் படம் பிடித்துக் காட்டுகிறார்,

**பதவி ஆசையிலாத சேவைக் குணம் கொண்ட ஒரு ஆள்.**

**ஒரு மாவட்டத்துக்கு**

**ஒருவர்கூட**

**இல்லையாம்!!**

காங்கிரஸ் இன்று அந்தளவுக்கு வந்துவிட்டது — காங்கிரசிலிருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் மக்களுக்குப் பாடுபடும் ஆர்வம் இல்லை; காங்கிரசிலிருக்கும் எல்லோரும் பதவியாசை கொண்டவர்களாகவே விளங்குகிறார்கள்-என்று நாமல்ல, லால்பகதூர் சொல்கிறார். தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவரையும், காமராசரின் குழாத்தையும் கூடவைத்துக்கொண்டே, இதனைச் சொல்லியிருக்கிறார், அவர்.

ஊருக்கு ஒருவர் அல்ல; மாவட்டத்துக்கு ஒரே ஒருவராவது கிடைப்பாரா எனில், இயலாது என்கிறார்!!

**"காங்கிரஸ் கெட்டுவிட்டது. அதனல், இனி இந்தியாவுக்குப் பயன் ஏற்பட முடியாது. அதை மக்கள் புறக்கணிக்கத் துவங்கிவிட்டார்கள்."**

ஜெர்மனியிலே சுற்றுப்பயணம் செய்துக் கொண்டிருப்பவரும், காங்கிரசில் தியாகம் பல புரிந்து பிறகு விலகியவருமானஜயப்பிரகாஷ் **நாராயண்,** வெளிநாட்டிலே வெளியிடுகிறார், இத்தீர்ப்பை.

அவர்கள் ஏன்? காங்கிரஸ் மூச்சுவிடும்படியான அளவுக்காவது இருப்பதற்குக் காரணமான நேரு அவர்கள், அண்மையில் தான் விலகப்போவதாக அறிவித்தபோது, காங்கிரசை எப்படி வர்ணித்தார்?

**பதவியாசை**

**பிற்போக்குப்பித்து**

**சுயநலம்**

**போட்டிச் சண்டை**

மிகுந்துவிட்டது, என்றார் நேரு! இதைவிடவா, வேறு 'நற்சாட்சி' வேண்டும் காங்கிரசைப்பற்றி? இப்படி, எல்லாம் சொன்னலும், இன்னும் அங்குதான் இருக்கிறார்கள் இவர்கள்! வளர்த்த கட்சியெனும் பாசம்போலும்!

பாசம் பரிவு எவ்வளவு காட்டினும், காங்கிரசின் எதிர்காலம் என்னவென்பது, அங்குள்ள ஒவ்வொருவருக்கும் இன்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஆயினும், மக்கள் மத்தியில் பேசும்போது 'அது இது' என்று சொல்லித் தப்பிக்க நினைக்கிறார்கள். இது, எத்தனை நாளைக்குச் செல்லும்? ★


**தயாராகிவிட்டது!**

நந்தமிழ் நாட்டின் நல்ல பல நிகழ்ச்சிகளை பின்னணியாகக்கொண்டு தீட்டப் பெற்றதும் திரு. அகிலன் அவர்களின் மதிப்புரை கொண்டதுமான சிறந்த,

**துப்பறியும் நாவல்!**

**"உயிரை வாங்கிய உயில்!"**

(ரா. வேங்கடசாமி)

**விலை ரூ. 1-25**

குறிப்பு:- தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் **25**-புதிய காசுகள் சேர்த்து ரூ. **1-50** எம். ஒ. அனுப்புக.

விபரங்கட்கு:-

**முத்துவேல் பதிப்பகம்**

77. மதுரைசாலை

திருச்சிராப்பள்ளி-8.



# என்ன மனமோ!

வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது!! — என்று நாம் சொன்னால், வெகுண்டு, வடக்கும் வாழவில்லை தெற்கும் தேயவில்லை என்று 'படபட'வெனப்பேசிப் பதிலளிக்கும், நமது நிதியமைச்சர் சுப்ரமணியனார், சென்ற மே 23-ந் தேதி, கோவையில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசியபோது, டில்லி மந்திரியாருக்குத்தந்த பதிலினைக் கண்டோம்; மகிழ்ந்தோம்.

7 இலட்சம் முதல் போட்டு, கோவையில் ஒருவர், ஒரு சிறு இரும்பு உருக்கு ஆலை அமைத்திருக்கிறார். அதன் திறப்பு விழாவில், டில்லி தொழில் மந்திரியான லால் பகதூர் சாஸ்திரி என்பாரும், முதலமைச்சர் காமராஜரும், சுப்ரமணியமும் கலந்து கொண்டிருந்திருக்கின்றனர். லால் பகதூரார் பேசும்போது சொன்னாராம், "சின்னச் சின்ன வழிகளில், சென்னை, இதுபோன்ற ஆலைகளை அமைக்கிறது. பாராட்டப்பட வேண்டியதாகும். சென்னை மனித வளமும் இயற்கை வளமும் நிரம்பியநாடு. இங்கு புத்திசாலிகள் அதிகம்", என்பதாக.

"இங்குள்ளவர்கள் புத்திசாலிகள் தான்! சந்தேகமில்லை. என்றாலும், இங்கே தொழில்வளர, மத்ய சர்க்கார், மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் உதவியையும் அளிக்க வேண்டும்", என்றாராம், விழாவில்கலந்து கொண்டு பேசிய சுப்ரமணியம்! "மனப்பூர்வமான ஒத்துழைப்பு......", என்றால் என்ன பொருள்? நாம் கேட்டால், சுப்ரமணியனாருக்குக் கோபம் வரும்! நீங்களே, புரிந்து கொள்ளுங்கள்!!

முதல் 7 இலட்ச ரூபாய்-சின்ன ஆலை—நாள் ஒன்றுக்கு 50 டன் இரும்பு கிடைக்குமாம். முயற்சி சிறிதாயினும், ஈடுபட்டவரை நிச்சயம் பாராட்ட வேண்டியதுதான்! அதே நேரத்தில், வடக்கேயுள்ள டாடா ஆலையினைப் பற்றி ஒரு சிறிது சிந்தித்தால் மனம் குழம்பாமற் போகாது. நாளொன்றுக்கு 2,500 டன் இரும்பு, டாடாவில் உற்பத்தி செய்யப்படுகிறது — ரூபாய் 14 லட்சத்துக்கு மேல் ஒரு நாளைக்கு வருமானம் வருகிறது, அக்கம்பெனிக்கு. டாடா கம்பெனி ஒரு நாளைக்கு சம்பாதிப்பது 14-இலட்சம் ரூபாய்! கோவைக் கம்பெனியின் மூலதனமே 7 இலட்சம் ரூபாய்தான்!!

ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா ஆலையைப்போல், இங்கும் ஒரு இரும்பாலை வைக்கவேண்டும் என்பதுதான் நமது கோரிக்கையாகும். சேலத்தில், அதைப்போல் ஒரு ஆலையை வைக்கவேண்டும் என்று நெடுநாட்களாகக் கோரப்பட்டு வருகிறது. ஆனால், வடநாட்டில் பிலாய், ரூர்கலா எனுமிடங்கள், டில்லிக்குத் தெரிந்தனவே ஒழிய "சேலம்" தெரியவில்லை. நாம் மட்டுமின்றி, சேலத்திலிருந்து டில்லிப் பார்லிமெண்டுக்குச் சென்ற எஸ். வி. இராமசாமி எனும் காங்கிரஸ் உறுப்பினர், அடிக்கடி 'சேலம், சேலம்' என்றே பேசிக் கொண்டிருந்தார். "என்னடா பெரிய தொல்லையாக இருக்கிறது,' என்று அவருக்கு ஒரு துணை மந்திரிப் பதவியைத் தந்துவிட்டார்கள்! உடனே அவர், இங்கு சுற்றுப் பயணம் வந்து, "தெற்கு எங்கே தேய்கிறது?", என்று பேச ஆரம்பித்து விட்டார்!!

தென்னாடு பலவழிகளில் புறக்கணிக்கப்படுகிறது என்பதை விளக்கவே நாம், "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது", என்று சொல்லி வருகிறோம். லால்பகதூர் சொன்னதுபோல, தென்னாடு வளம் நிரம்பிய பூமி. இயற்கை வளம் மட்டுமல்ல, மனித வளமும் நிரம்பிய நாடாகும். ஆனால் இப்படி வளம் நிரம்பிய பகுதிக்கு, வடநாட்டுச் சர்க்கார் அளிக்கும் மதிப்பு என்ன? இதோ ஒருவர், அதை விளக்குகிறார்:

"இரும்பு போன்ற இன்றியமையாத கனிப் பொருள்கள், இங்கே ஏராளம் உண்டு. ஆனால், அதை யார் கண்டு பிடிக்கிறார்கள். டில்லி சர்க்கார் இதற்கான ஆராய்ச்சிகளைப் பலவிடங்களில் செய்கிறார்கள். ஆனால், தென்னாட்டைச் சேர்ந்த ஆந்திராவிலோ? வேதனையுடன் சொல்கிறேன், சுமார் 1,12,000 சதுர மைல் பரப்புள்ள, ஆந்திராவில் மூன்றில் இரு பகுதியுள்ள பாகம் இன்னும் தோண்டிப் பார்க்காமலும், ஆராய்ச்சி செய்து பார்க்கப்படாமலுமே கிடக்கிறது."

பொறுப்பற்றவரல்ல, இவர்! ஆந்திர அரசின் ரெவினியு அமைச்சராக இருக்கும் காளா வெங்கட்டராவ், கடந்த மே 21-ந் தேதி ஐதராபாத் நகரில் நடந்த இந்திய சர்க்காரின் எஃகு - கனிப் பொருள் —ஆலோசனைப் போர்டின் 6-வது மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். வளம் இருக்கிறது! ஆனால், அதைப் பற்றிச் சிந்திப்பதுகூட இல்லை, டில்லி!! சிந்தனைக்குப் பிறகுதானே, செயல். சிந்தனைக்கே இடமில்லை எனும்போது, ஆலை எப்படி ஏற்படும்? நமது நாடு எப்படி முன்னேறும்?

லால்பகதூர், புத்திசாலிகள் என்கிறார்—சிறு சிறு ஆலைகள் அமைப்பதை வெகுவாகப் பாராட்டுகிறார்—இப்படித்தான் செய்ய வேண்டும் என்கிறார். கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆலையில் தயாராகயிருக்கும் உருக்குப் பொருள்கள், ஒருவேளை, அந்த ஆலையினரின் வசமுள்ள நூல் ஆலை போன்றவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். ஆனால், வியாபாரத்தை நோக்காக வைத்து

அப்படியொரு "சிறு ஆலை" அமைக்கப்பட்டால், அதனால் வாழ முடியுமா? டாடாவுடன் போட்டி போட இயலுமா? ஒரு நாளும் முடியாதே! அதற்கு வழி என்ன செய்து தருவார், லால் பகதூர்?

அவர் சென்ற இடங்களில் கைத்தறியைப்பற்றியும் அதிகம் பேசியிருக்கிறார்—கைத்தறித் துணி அதிகம் தேங்கியிருக்கிறது, என்று வேதனையுடன் வெளியிடவும் செய்திருக்கிறார். அப்படித் தேங்காமல் செய்யத்தானே, தென்னாட்டினர் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றனர்—புடவையையும் வேட்டியையும் கைத்தறிக்கே ஒதுக்கிவிடுங்கள் என்று! கவலைப்படும் டில்லி அமைச்சர், வழி செய்வாரா, இதற்கு? செய்யமாட்டார்—ஏனெனில், நாட்டைச் சுரண்டும் பெரிய பெரிய நெசவாலைகள் எல்லாம் வடக்கேயன்றோ உள்ளன? அவைகளுக்குக் கிடைக்கும் இலாபமன்றோ போய்விடும்! எப்படி, டில்லி சம்மதிக்கும்? சம்மதிக்க மனம் வராததால்தானே, நமது நெசவுத் தொழில், குற்றுயிராக அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறது!

"குடிசைத் தொழில்களைச் செய்யுங்கள்—செய்யுங்கள்!!" என்று டில்லியிலிருந்து வரும் ஒவ்வொருவரும், நமக்குச் சொல்லத் தவறுவதில்லை. அப்படிச் சொல்கிறவர்கள் பெரிய தொழில்களை நடத்த நமக்கு வசதியளிக்கிறார்களோ என்று கேட்டால், நிதியமைச்சர் போன்றோர், "இதுதான் பேதபுத்தி! நெய்வேலி இல்லையோ நமக்கு? அது என்ன சிறு தொழிலா? எப்பேற்பட்டது தெரியுமா?" என்று கோபாவேசத்துடன் கூறுவார்கள். அந்த நெய்வேலியைப்பற்றி, சிம்சன் அதிபரும் பெரிய தொழிலதிபருமான **அனந்தராமகிருஷ்ணன்** என்பார் மே 29-ந் தேதி விருதுநகர் வர்த்தக சபையில் பேசும்போது, குறிப்பிட்டிருக்கிறார்.

**"தமிழ் நாட்டிலிருக்கும் வியாபார சமூகம், நல்ல தேர்ச்சிபெற்றது; புத்திக் கூர்மை நிரம்பியது. எனினும் இங்குதான் தொழில்கள் கிடையாது! இதுவரையில் நமக்கு என்று இருக்கிற ஒரே ஒரு பெரிய திட்டம், நெய்வேலி ஒன்றுதான். வடக்கே 5000 கோடி செலவிடுகிறார்கள், ஐந்தாண்டுத் திட்டத்தில். இங்கோ 60 கோடியில் செலவிடும், ஒரே ஒரு நெய்வேலிதான்."**

அனந்தராமகிருஷ்ணன், தி. மு. க. வல்ல! அவர், இவ்விதம் கூறுகிறார். அங்கே 5000; இங்கே 60 தானா? என்கிறார். இதுபோல ஒவ்வொரு துறையாக, எடுத்துக் கொண்டு பார்த்தால், அமைச்சர், அனந்தராமகிருஷ்ணன் போன்றோரும் ஆயாசப்படாமல் இருப்பதில்லை. அதையே நாம் சொல்லும்போதுதான். ஆயாசமும் ஆத்திரமும் கொள்ளுகின்றனர். என்ன மனமோ, இது!!

★

# முல்லையின் காதல்!

"கதி"

பட்டது அந்தமரமென்றறிந்தும் அப்பசுமுல்லை தாவிப் படர்ந்தது. முல்லை பூத்து மணத்தை முகிழ்த்திடக் கார்காலமும் வந்தது. பட்ட மரமும் துளிர்த்தது. கார்கால நிலவினிலே கொடியும் கொம்பும் ஒன்றாய்த் தழுவிக் கதைபல பேசிக் களித்துச் செழித்தன. தென் பொதிகை அகில் மணமும் தீந் தமிழின் பாமணமும் தென்றலலை மீது வந்து, தேனிலவு கொட்டும் வெண்ணொளியோடு கலந்து; நன்றலர்ந்த கொடிக்கும் கொம்புக்கும் மன்றல் வாழ்த்துக் கூறிப் போந்தன. காதலினால் அங்கே ஊடலுமுண்டு; பின் கூடலுமுண்டு.

கார்காலக் கழிவிற்கு முன்னே காலதேவன் கைப்பட்ட கடுங்காற்றொன்று முல்லைக்குக் காலனாய் வந்தது. தகையில்லாப் பெருங்காற்று தழுவி நின்ற தளிர்க் கொடியை மரத்தினின்றும் தனியேபிரித்துச்சிதைத்து அழித்தது. முல்லையைப் பிரித்த காற்றின் தாக்குதல் மரத்திற்கும் உண்டு. நன்கு துளிர்த்து முழுதும் தளர்ந்து முக்காலம் பழுக்கக் காத்திருந்த மரம் மறுபடியும் ஏனோ மொட்டையாயிற்று.

காலத்தின் பருவத்திலே மாறுதல். கூதிர் காலப் பனித்துளியின் பசிய உணவால் மறுபடியும் துளிர்த்த மரம் வானைக்கிப் படர்ந்து வளர்ந்து வளமிக்க காய்கள் காய்த்துக் கனிந்து பயனீந்து நின்றது.

வேனிற் காலம். பயன் தந்து நிற்கும் அம்மரத்தைப்பற்றியேறப் பல கொடிகள் சுற்றிவந்தன. மரம் அவைகள் தன்மேல் ஏறுவதை விரும்பவில்லை. ஆயினும் அவை பற்றின. தண்மையும் மென்மையும் அக் கொடிகளுக்கு இருக்கலாம். ஆனால் முல்லையைப் போல் மணம் முகிழ்க்கும் திறன் அவற்றிற்கு இல்லை. முல்லைக்கு இல்லை அக் கொடிகள் என்றெண்ணியது மரம்.

முதுவேனிற் காலம் வந்தது. முல்லைக்கு நிகரில்லா அம் முட் கொடிகளைத் தாங்க விரும்பாத மரம் முல்லையின் நினைவால் மறுபடியும் பட்டது.

ஆடியிளம் பிறையினிலே ஓர் நாள். அன்றுதான் முல்லை மொட்டையாய்ப் பட்டு நிற்கும் மரத்தின் காதலி-கொழுகொம்பை தழுவியேற முற்பட்ட நன்னாள். அன்றும் பட்ட மரம், இன்றும் பட்டமரம். ஆனால் அன்றையபட்ட மரம் முல்லையின் தழுவலால் தளிர்த்தது. இன்றைய பட்ட மரமோ இனி என்றுமே துளிர்க்காது.

இரவு வந்தது; புயலையும் கூட்டி இழுத்து வந்தது. முல்லையின் அணைப்புக்கு ஏங்கித் துடித்த மரம் புயலைத்தான் அணைத்துக் கொள்ள முடிந்தது.

★

மூலம்: மோபசான்

# "வைரமாலை!"

தமிழில்: "அன்பு"

மாட்டில்டா அப்படியொன்றும் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு எழுத்தாளன் மனைவி தான். வருவாய்க்கும் செலவுக்கும்தான் சரியாக இருந்தது அவர்களது வருமானம். பணத்தைச் சேமித்து வைப்பது என்பது அவர்கள் கனவிலும் செய்து பார்க்காத ஒன்று.

ஆனால் மாட்டில்டாவுக்கோ அந்த வாழ்க்கையே வெறுப்பாக இருந்தது. ஆடம்பர வாழ்க்கையைப்பற்றியே அவள் மனம் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும். விலையுயர்ந்த வீடு, வெளியே செல்ல கார், உயர்ந்த நகைகள், வீட்டு வேலைகளைச் செய்ய ஏராளமான ஆட்கள், இவைகளைப் பற்றியெல்லாம் அவள் பகற்கனவு காணுவாள். இவ்வாறான ஏழ்மை நிலையில் இருப்பதற்குச் சிலசமயங்களில் வருந்திக் கண்ணீர் வடிப்பாள். அவள் பள்ளித் தோழி ஒருத்தி! இப்பொழுது செல்வச் செருக்கோடு வாழ்வதைக் கண்டு பொறாமைப்படும் அளவுக்குக்கூட வந்து விடுவாள். பெண்களுக்குள்ள இயற்கையான குணங்களுள் ஒன்றான நகைப்பைத்தியம் இவளையும் பிடித்துக் கொண்டது. அவள் கழுத்தில் நகைகள் ஒன்றுமில்லையென்றாலும், அவளுக்கிருந்த இயற்கை அழகு அக்குறையைப் போக்கிற்று.

ஒருநாள் மாலை அவள் கணவன் லூய்சேல் அலுவலகத்திலிருந்து என்றுமில்லாத மகிழ்ச்சியோடு வந்தான். ஆனால் மாட்டில்டாவுக்கோ அவன் மகிழ்ச்சியைக் காணக் கோபமாகத்தானிருந்தது. பாவம்! கணவன் தன்னை இந்த நிலையில் வைத்திருக்கிறானே என்ற வெறுப்புணர்ச்சி போலும். அவன் தான் என்ன செய்வான்! காலமெல்லாம் எழுதி எழுதி கை வலி ஒன்றுதான் அவன்கண்டது. ஆனால் அந்தக்கைநிறையப்பணம் தான் அவன் காணுதது!

"மாட்டில்டா! நமக்குமந்திரியின் வீட்டிலிருந்து ஒரு விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது, இதோ பார்!" என்று மகிழ்ச்சியுடன் அழைப்பிதழை நீட்டினன். வாங்கிப்படித்த அவள் அதை வெறுப்போடு கீழே எறிந்தாள்.

"என்ன? அழைபபிதழைக் கண்டு ஆனந்தப்படுவாய் என்றல்லவா இருந்தேன்? ஏன் இப்படி?" என்றான் லூய்சேல்.

"இந்த அழைப்பிதழைக் கண்டு நீங்கள் ஆனந்தப்படலாம். நான் அந்த நிலையில் இல்லை. அழைப்பு வந்திருப்பதோ மந்திரியின் வீட்டிலிருந்து, பத்துப் பேர் பெரிய மனிதர்கள் வருவார்கள். அங்கு போய் என்னை இப்படி இந்த உடையோடும் வெறும் கழுத்தோடும் நிற்கச் சொல்கிறீர்களா? அது உங்களுக்கே அவமானமில்லை?"

"இதோ பார்! உயர்ந்த உடையாலா உன் உடல் அழகுபெற வேண்டும்? உனது உடலிலிருக்கும் எந்தஉடையும் அது உன்மீது இருப்பதிலல்லவா அழகு பெறுகிறது! உன் புன்னகை ஒன்று போதுமே! உனக்கு வேறு நகை எதற்கு?"

"இப்படிச் சொல்லிச் சொல்லி ஏமாற்றிவந்தது போதும். இந்த நிலையில் நான வரவேமாட்டேன்; வேண்டுமானால் அந்த அழைப்பிதழை வேறு யாருக்காவது கொடுத்துவிடுங்கள்"

"சே! அது மரியாதையாகுமா? நம்மை மதித்து ஒரு மந்திரி அனுப்பியிருக்கிறாரே! இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் வேறு இதுபோல் நமக்கு கனவிலும் கிடைக்காது!"

"பின் வேறு வழி?" மாட்டில்டாவின் கண்களிலிலிருந்து இரு துளிக் கண்ணீர் வழிந்தது. இது வரை வேடிக்கையாகப் பேசிவந்த லூய்சேலின் மனம் உருகிற்று.

லூய்சேல் ஏதோ யோசித்தவனாக "சரி, சரி! உனக்குப் புது உடைகள் வாங்குவதற்கு எவ்வளவு ஆகும் என்றான். "சுமார் 400 பிராங்குகள் ஆகும்" என்றாள் ஆவலுடன்.

"என்னிடமிருக்கிறது. துப்பாக்கி வாங்குவதற்காக என் ஆயுள் பூராவும் சேமித்து வைத்த தொகை. அதைக் கொண்டு வாங்கிவிட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" மாட்டில்டாவின் கண்களில் மல்கியிருந்த நீர்த்துளிகள் மறைந்து மகிழ்ச்சி தோன்றியது.

நாளை விருந்துக்குச் செல்ல வேண்டும். லூய்சேலுக்கோ கட்டுக்கடங்கா மகிழ்ச்சி! மறுநாளும் வந்தது. அவன் வேலைகளை முடித்துக்கொண்டு தயாரானான்.

"என்ன 'இளம்பலாமா?......இப்போதுதான் தலையலங்காரமே ஆரம்பிக்கிறதா, சீக்கிரம்!" என்று மனைவியைத் துரிதப்படுத்தினான்.

கண்ணாடி முன் சென்று புது உடையில் தன் மேனியழகைப் பார்த்த மாட்டில்டாவின் முகம் திடீரெனச் சுருங்கியது. அவள் கைகள் தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டு இருந்தன. வெறும் கழுத்து!

"நான் விருந்துக்கு வரப்போவதில்லை; விருப்பமானால் நீங்கள் சென்று வாருங்கள்" படபடப்புக் கலந்த கோபக் குரலில் பேசினாள் மாட்டில்டா.

"உனக்குப் பைத்தியமா என்ன? ஏன் இப்படித் திடீரென்று உளறுகிறாய்?"

"எனக்குப் பைத்தியமுமில்லை ஒன்றுமில்லை. எப்படி நான் இந்தக் கழுத்தோடு விருந்துக்கு வருவேன்?"

"இப்படித் திடீரென்று நினைத்ததும் நகை வாங்கிவிட நாம் என்ன செல்வந்தர்களா?"

"நாம் செல்வந்தர்கள் இல்லையென்று இப்போதுதான் தெரிந்ததா? எப்படியோ நகையில்லாமல் நான் வெளியே வரமாட்டேன்!'

லூய்சேலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் மனதில் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது "அடுத்த தெருவில் உன் பணக்காரச் சிநேகிதி ஒருத்தி இருக்கிறாளே, அவளைக் கேட்டுப்பாரேன்! விருந்துக்குச் சென்று வந்ததும் திரும்பவும் கொடுத்துவிடுவோம்"

"நல்ல நேரத்தில் யோசனை கூறினீர்கள்! இதோ போய்க் கேட்டுப்பார்க்கிறேன்" என்று மகிழ்வு பொங்கக் கூறிவிட்டுத் தன் சிநேகிதியின் இல்லத்தை நாடினாள். அவளுக்கோ 'நம் வீட்டைத் தேடி இவ்வளவு தூரம் வந்துவிட்டாளே' என்ற பெருமிதத்தில் அவளிடமிருந்த நகைகள் பூராவையும் எடுத்துக் காண்பித்து விரும்பியதை எடுத்துச் செல்லுமாறு கூறினாள். மாட்டில்டாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை! தன் கனவில்கூட அவள் இவ்வளவு நகைகளைப் பார்த்தது கிடையாதே! அங்கிருந்த நகைகளுள் ஒரே ஒரு வைரமாலைதான் அவள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அதைக் கேட்டு வாங்கிக்கொண்டு, மறுநாள் தந்துவிடுவதாக வாக்குறுதியும் தந்து வந்தாள்.

இரவல் வாங்கிய வைரமாலையைப் போட்டுக் கொண்டு இருவரும் விருந்துக்குக் கிளம்பினர். மாட்டில்டாவுக்கு இருந்த இயற்கைஅழகுடன் அவள்தேடிக் கொண்ட செயற்கை அழகும் சேர்ந்து வழியில் வருவோர் போவோரையெல்லாம் கவனித்து விட்டுப் போகச் செய்தது!

விருந்திலும் எல்லாப் பெரிய மனிதர்களும் அவளையே நோக்கினர்! லூய்சேலுக்கும் பெருமிதம் தாங்க முடியவில்லை! தன் மனைவியின் இத்துணையளவு அழகை அவனே இதற்கு முன் பார்த்தது கிடையாது! மாட்டில்டாவும் என்றுமடையாத மகிழ்ச்சியடைந்தாள்.

விருந்து முடிந்தது. இரவு வெகு நேரமாகிவிட்டதால் கார் போக்குவரத்து முதலியவைகள் எல்லாம் நின்றுவிட்டன. ஆகவே அவர்கள்வாடகைக்கார்வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர். மாட்டில்டா கதவைத் திறந்து விளக்கைப் போட்டாள். தன் புது அழகை இன்னொரு முறை பார்க்க விரும்பினாள் போலும்! பெருமிதத்தோடு கண்ணாடியின் முன் நின்று தன் உடைகளைக் கவனித்தாள். அடுத்து கழுத்திலிருந்த தன் இரவல் நகையைப் பார்க்க முயன்றாள்.

நகையைக் காணோம்! வைரமாலையைக் காணோம்! ஐயோ என்றலறினாள்! அவளது அலறலைக் கேட்டு என்ன என்று கேட்டபடியே ஓடோடி அவளருகில் வந்தான் லூய்சேல்!

"கழுத்திலிருந்த வைரமாலையைக் காணோமே! இப்பொழுது என்ன செய்வது?" பதைபதைத்தாள் மாட்டில்டா.

"என்ன உளறுகிறாய்? மாலைவரை இருந்த மாலை எப்படித் திடீரென்று காணாமற்போகும்? சரியாகப் பார்! ஆச்சரியமாக இருக்கிறதே!" அதற்குள்ளாக உடல் வியர்த்துவிட்டது அவனுக்கு.

"உண்மையாகவே காணோம்! நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டேன். வீட்டிற்குள் நுழைந்ததும் நேராக கண்ணாடி முன்தான் வந்தேன். வேறு எங்காவது சென்றாலல்லவா வீட்டிற்குள் ஒழிந்திருக்க வேண்டுமென நினைக்கலாம்?"

"ஒருவேளை நாம் வந்த காரில் நழுவி விழுந்திருக்கலாம்!...ம்...... அந்தக் காரின் எண் உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"நான் அதைக் கவனிக்கவில்லையே!" என்றாள் கண்களில் நீர் மல்கியபடி.

"சரி சரி நாம் வந்த வழியே ஒரு முறை சென்று பார்த்து வருகிறேன். கீழே எங்காவது விழுந்திருந்தாலும் விழுந்திருக்கும்" சோர்வோடு வெளிக்கிளம்பினான் லூய்சேல்.

மாட்டில்டாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. மயக்கமடைந்தவள் போல நாற்காலியில் சாய்ந்தாள். தன் சிநேகிதிக்கு என்ன பதில் சொல்வது என்பதை நினைத்தபோது அவள் உடல் நடுக்கமெடுத்தது. சிறிது நேரம் கழித்து லூய்சேல் திரும்பி வந்தான். ஆனால் அவன்சோர்வோடு வருவதைக் கண்டு அவள் இன்னும் பன்மடங்கு அதிர்ச்சியடைந்தவளானாள். இனியும் வைரமாலை அவர்களுக்குக் கிடைக்கும் என்பது வீண் எண்ணம் என்பதை உணர்ந்தாள்.

மறுநாள் லூய்சேல் முதல் வேலையாக போலீசுக்கு விபரங்கள் தந்தான். எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் கொடுத்தான். அவனுக்கு வைரமாலை கிடைக்கும் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லை. மனைவியின் கட்டாயத்தின் பேரில்தான் இவையனைத்தையும் செய்தான். அந்தப் பணக்காரச் சிநேகிதிக்கும் இன்னும் ஒரு வாரத்திற்குள் நகையைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக மாட்டில்டாவை ஒரு கடிதம் எழுதியனுப்பச் சொன்னான்.

மாட்டில்டா அந்த நிகழ்ச்சிக்குப் பின் முற்றிலும் மாறிவிட்டாள். பார்ப்பதற்கு நோயாளி போல் காணப்பட்டாள். நான்கு நாட்கள் சென்றன. வைரமாலையைப் பற்றி எந்தவிதத் தகவலும் அவர்களுக்குத் தெரியவில்லை. வைரமாலை இனிக் கிடைக்காது என இருவரும முடிவுகட்டி விட்டனர். ஆகவே அந்தச் சிநேகிதிக்கு இன்னொன்று புதியதாகத்தான் வாங்கிக் கொடுத்தாக வேண்டும்! இதை நினைத்தபோது இருவருக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. எப்படியும் வாங்கிக் கொடுத்துத் தானே ஆகவேண்டும்!

மறுநாள் இருவரும் கடை கடையாக ஏறி இறங்கினார்கள். பழைய வைரமாலையைப்போல் எங்கும் இல்லை. கடைசியாக ஒரே ஒரு கடையில்தான், அதுவும் ஒன்றே ஒன்று ஒழிந்த நகையைப் போன்று இருந்தது. அதன்

விலையைக் கேட்டபோது இருவர் உடலும் வியர்வையால் நனைந்தது!

நாற்பதினாயிரம் பிராங்குகள்!

அவர்கள் வாழ்க்கையிலேயே பார்க்காத தொகை! என்ன செய்வது! எப்படியும் வாங்கிக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்! இருப்பதும் ஒன்றுதான்! ஆகவே அந்தக் கடைக்காரனை, தாங்கள் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தொகையைக் கொடுத்து வைரமாலையைப் பெற்றுக் கொள்வதாயும், அதுவரையில் அதை விற்காமல் வைத்திருக்குமாறும் மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். அவனும் இரக்க உணர்ச்சியோடு சம்மதித்தான்.

இருப்பதோ மூன்று நாட்கள்! இதற்குள் 40,000 பிராங்குகள் சம்பாதித்தாக வேண்டும்! கடைக்காரனிடம் என்னவோ மதிப்பாகச் சொல்லிவந்துவிட்டார்கள். இருவரும் ஒருவரையொருவர் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டனர். லூய்சேல் பணம் தேடும் படலத்தில் இறங்கினான்! எப்படியும் அவன்தானே சம்பாதித்தாக வேண்டும்! காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்ளச் செய்த கதையாயிற்று அவர்கள் கதையும்!

கடனாகப் பாதி; பொருள்களை அடகு வைத்துப் பாதி, இப்படியாக பல இடங்களில் பல்வேறு வகையாக சிறு சிறு தொகையாகப் சேர்த்து நாற்பதினாயிரம் பிராங்குகள் சேர்த்தான்! தவறு தன்மீதிருப்பதால் மாட்டில்டாவுக்குத் தன் கணவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக்கூடத் துணிவில்லை. சேகரித்த தொகையைக் கொடுத்து வைரமாலையை வாங்கி வந்தனர்.

அன்று மாலையே நகையை எடுத்துக்கொண்டு சிநேகிதி வீடு நோக்கிப் புறப்பட்டாள். நகை ஒழிந்தது, அதற்குப் பதிலாக அதுபோலவே புது நகை ஒன்று வாங்கியது, அதனால் காலதாமதமாகியது இவைகளையெல்லாம் மாட்டில்டா சிநேகிதியிடம் கூற விரும்பவில்லை. தன்னைப் பற்றிக் கீழாக நினைத்து விடுவாளே என்று நாணம் கொண்டாள்.

சிநேகிதியும் மாட்டில்டாவைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தாள். மாட்டில்டா வைரமாலையை சிநேகிதியிடம் தயங்கிக்கொண்டே கொடுத்தாள். ஆனால் அவளோ அந்த பெட்டியைக்கூட திறந்து பார்க்காமல் வாங்கி வைத்துக்கொண்டாள்! இதைக் கண்ட மாட்டில்டாவின் மனம் மகிழ்ச்சியடைந்தது. திறந்து பார்த்துவிட்டால் நகையை அடையாளம் கண்டு கொள்வாளோ என்ற பயம் அவளுக்கு! சிநேகிதிக்கு நன்றி தெரிவித்துவிட்டு வீடு திரும்பினாள்.

இனித்தான் அவர்கள் முன் இமயம் போன்றதொரு பிரச்சனையிருந்தது. எப்படிக் கடனையெல்லாம் தீர்ப்பது? எனவே அவர்கள் குடும்பத்தில் பல மாற்றங்கள் உண்டாயின.

குடும்பம் முற்றிலும் மிகச் சிறிய வீட்டிற்குமாற்றப்பட்டது. இருந்த ஓரிரு வேலைக்காரர்களும் நீக்கப்பட்டனர். எளிய உணவு எளிய உடை இவைகளையே மேற்கொண்டார்கள். வருவாயில் பாதிக்கு மேல் கடனை அடைப்பதற்கு மட்டும் ஒதுக்கிவைத்தார்கள். எல்லா வேலைகளையும் மாட்டில்டாவே செய்ததால், அவள் மேனி உருக்குலைந்தது. லூய்சேலுக்கு அவளைக் காணும்போதெல்லாம் வருத்தமாக இருக்கும். என்னசெய்வது! மாட்டில்டாவும் இப்போதெல்லாம் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியே நினைப்பதில்லை! முன்பிருந்த எண்ணங்களை யெல்லாம் மாற்றிக் கொண்டாள்!

பத்துஆண்டுக்காலம்சென்றது! நாற்பதினாயிரம் பிராங்குகள் சேர்ந்தன!! கடன் தொகை முழுதும் அடைக்கப்பட்டது!!!

ஒரு நாள் மாலை!

தெருவில் போய்க் கொண்டிருந்த மாட்டில்டா தற்செயலாகத் தன பழைய சிநேகிதியைப் பார்க்க நேர்ந்தது. இன்னும் அந்தப் பழைய ஆடம்பரத்துடனேயே காணப்பட்டாள். மாட்டில்டா அவளைப் பெயர் சொல்லிக்கூப்பிட்டாள். சினேகிதி அவளைக் கண்டாள். ஒரு நிமிடம்; இரண்டு நிமிடம் இன்னும் அவளால் மாட்டில்டாவை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை!–'மாட்டில்டா!' என்றொரு ஆச்சரியக் குரல் இருவரும் கட்டித் தழுவினர்!

மாட்டில்டாவின் உள்ளத்தில் 'பழைய' நினைவு தலை தூக்கியது! இவ்வளவு காலம் கழிந்த பின்னர் அந்த நிகழ்ச்சியைக் கூறுவதில் தவறு இல்லையென எண்ணி, பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சிநேகிதியின் வைரமாலை காணாமற் போனதில் இருந்து அதற்குப் பதில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் 40,000 பிராங்குகளுக்குப் புது நகை வாங்கிக் கொடுத்ததோடு கடனையும் தீர்த்தது வரையில் சோகக் குரலில் சொன்னாள்.

"ஒழிந்த உன் வைர மாலைக்காக 40000 பிராங்குகள் கொடுத்து அதேபோல் புது நகை ஒன்று வாங்கிக் கொடுத்தோம்."

—இந்தச் சொற்கள் மாட்டில்டாவின் வாயிலிருந்து வெளிவந்ததும், அந்தச் சிநேகிதி அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை! அவள் முகத்தில் ஆச்சரியம் அதிர்ச்சி, பரிதாப உணர்ச்சி இவையனைத்தும் மாறி மாறித் தோன்றி மறைந்தன! கடைசியில் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு அந்தச் சிநேகிதியின் வாயில் இருந்து திக்கித் திக்கி வந்த சொற்கள் இதுதான்: "மாட்டில்டா!......அது, அந்த வைர மாலை...என் வைரமாலை...உண்மையான வைரம்......இல்லை!...... போலி...வைரம் மாதிரி......இருக்குமே தவிர...உண்மையானது... இல்லை"

அவ்வளவுதான்! மாட்டில்டாவுக்கு கடந்த பத்தாண்டு காலத் துன்ப வாழ்வு ஒருமுறை மனக் கண்ணில் பளிச்சிட்டது! கடைசியாக அந்தச் சிநேகிதியின் ஒழிந்த "வைர" மாலையும் அதற்குப் பதில் அவள் வாங்கிக் கொடுத்த வைரமாலையும் அவள் முன் தொங்குவதுபோல் காணப்பட்டது! உடன் அவளுக்கு அவள் முன்னிருந்த சிநேகிதி...சாலை... மனிதர்கள்...ஏன் ... உலகமே சுழன்றது!

குணசாலியான பெண் தன் கணவனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோ, அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.

# மார்க்கஸ் துல்லியஸ் சிசிரோ (கி. மு. 106-43)

[ கோ. கோதண்டராமன் ]

ரோமானிய இலக்கியம் அரசியல் தத்துவத்திற்கு மூலாதாரமான கருத்துக்கள் ஏதும் வழங்கவில்லை என்றாலும், ரோம்நாட்டுக் குடியரசு, சாமராஜ்யம் இவற்றைச் சார்ந்த சட்ட நிபுணர்களும், கட்டுரையாளர்களும், வாதத்திறமானதும், நடைமுறைக்கு மிகவும் ஏற்றதுமான, ரோம் நாட்டுச் சட்டம், ஆட்சிமுறைத் துறைகளுக்கு விலைமதிக்கவொண்ணாத கருத்துக் கருவூலங்களை அளித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அரசாங்க அமைப்புமுறை, அரசியல் கொள்கை, கோட்பாடுகள் பற்றிய தங்களின் தத்துவ நூல்களில், பெரும்பாலும் கிரேக்கப் பேராசிரியர்களின் கருத்துக்களையே பின்பற்றியுள்ளனர். குறிப்பாக, கிரேக்கத் தத்துவாசிரியர்களின் அரிய அரசியல் கருத்துக்களால் பெரிதும் தூண்டப்பட்ட ரோம் நாட்டு எழுத்தாளர் "இயற்கை விதிகள்" பற்றிய தத்துவங்களை, ரோம்நாட்டுச் சட்டத் தொகுப்புக்களில் நயனுறப் பின்னியுள்ளனர். இதன் மூலம், பிற்காலத்து அரசியல் தத்துவத்திற்கு வேண்டப்பட்ட, அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தங்களின் சிரிய கருத்துக்களை ரோம்நாட்டு எழுத்தாளர்கள் மிகத் தெளிந்த வடிவத்தில் வழங்கியுள்ளார்கள்.

அரசியல் தத்துவங்களைப்பற்றிய தமது கருத்துக்களை மிக விரிவாகவும் தெளிவாகவும் எழுதிய ஒரே ரோமானிய ஆசிரியர் சிசிரோதான். பொதுவாக அவர் ரோமானிய உரை நடை எழுத்தாளர்களில் தலை சிறந்தவரெனக் கருதப்படுகிறார். அக்காலத்துத் திறமைவாய்ந்த வெற்றிகரமான வழக்கறிஞர்களுள் ஒருவராகவும், சிறந்த அரசியல் சொற்பொழிவாளராகவும், தேர்ந்த அரசியல் வாதியாகவும், அரசியல் நிபுணராகவும் விளங்கியவர்தான் மார்க்கஸ் துல்லியஸ் சிசிரோ. கசப்பு வாய்ந்த கட்சி அரசியலில் மிகச் சிறந்த தலைவராகவும், நீண்ட நாட்கள் நாடு கடத்தப்பட்ட அரசியல் வாதியாகவும் அவர் மிளிர்ந்தார். இவ்வாறு அவர் அரசியல் வாழ்க்கையில் மூழ்கித் திளைத்திருந்தபோது, கொடூரமான கட்சிப் பூசலொன்றில் கொல்லப்பட்டார்.

சிசிரோவின் நூல்கள் பல பிரிவுகளையும் கவர்ந்துள்ளன. சொற்பொழிவு, அறநெறி, தத்துவம் இன்ன பிற பொருள்களைப் பற்றியெல்லாம் அவர் விரிவாக எழுதியுள்ளார். அவரது நூல்களின் முக்கிய நோக்கம் முற்றிலும் புதுமையானதொரு அரசியல் தத்துவத்தைப் படைப்பதன்று. மாறாக, அவரது நூல்களின் ஒரே நோக்கம் — ஒப்பற்ற நோக்கமென்னவென்றால், அவருக்கு முற்பட்ட கிரேக்க நாட்டு அரசியல் மேதைகள் அளித்துச் சென்ற தத்துவங்களைப் பாமரரும் கற்றுப் புரிந்துகொண்டு பயன் பெறும் வகையில் விளக்குவதும், அந்தத் தத்துவங்களை ரோம்நாட்டில் எவ்வாறு தக்க முறையில் கையாள வேண்டும் என்பதை அறிவிப்பதுமேயாம். சிசிரோவின் இரு அரசியல் நூல்களின் சிற்சில பகுதிகளே நமக்குக் கிடைத்துள்ளன. அவை கி. மு. 51-ம் ஆண்டில் வெளியான குடியரசு என்ற நூலும், சிசிரோ இறந்துபோனதற்குப் பின் வெளியான "சட்டங்கள்" என்ற நூலுமேயாகும்.

சிசிரோ விட்டுச் சென்ற அரசியல் நூல்களின் உடனடியான நோக்கமென்னவென்றால், கிரேக்கர்களால் வெளியிடப்பட்ட எல்லோருக்கும் ஏற்புடைத்ததான, சமூக, அரசியல் உண்மைகளின் அடிப்படையின் பேரில், எவ்வாறு ரோமானியர் பாரம்பரிய— மக்கள் பணியை நிறுவமுடியும் என்பதை எடுத்துக்காட்டுவதுதான். இவ்வுண்மைகளை அறிந்து தெளிவதற்கு எவ்வாறு ஒரு அரசு துணைசெய்கிறது என்பதையும் அந்நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. சிசிரோ அனுசரித்த பொது முறையின்படி, முதன் முதல் முழுமைத்துவம் பெற்ற ஒரு அரசினைப்பற்றி விவரித்து, ரோம்நாட்டு வரலாறு எவ்வாறு அத்தகைய முறையை அனுசரிக்க முயற்சிசெய்து வெற்றியும் பெற்றது என்பதை அந்நூல்கள் விளக்காநிற்கும். பிளேட்டோ, அரிஸ்டாடில், பாலிபியஸ் இவர்களிடமிருந்து, "கலப்பட அரசியலமைப்பு முறையே பல சிறப்பட்ட அரசுகளிலும் சிறந்தது. என்ற தத்துவத்தைச் சிசிரோ எடுத்துக் கொண்டார். இத்துடன் "மேற்கூறிய அரசியலமைப்பின் அவசியமான தத்துவங்களை ரோம் நாட்டு அரசாங்கம் தான உச்சநிலை அடைந்திருந்த நாட்களில் நடைமுறையில் புகுத்தி உலக அரசுகளுக்கெல்லாம் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது" என்ற பாலிபியசின் கருத்தினைச் சிசிரோவும் பின்பற்றினார். ஆனால் அந்தத் தத்துவங்களைச் செயல்படுத்துதற்கு எத்தகைய சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பொறுத்தமட்டில், சிசிரோ பாலிபியசைப்போல் அவ்வளவு திட்டவட்டமாகவோ தெளிவுடனோ கூறிச்சென்றாரில்லை. எனினும், "சட்டங்கள்" தனது நூலில்,ரோம் நாட்டின் கலப்பட அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்பட்ட குறைகளைத் தவிர்ப்பதற்கு, சில அரிய யோசனைகளை அவர் அளித்துச் சென்றுள்ளார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ரோமானிய அரசியலமைப்புப் பற்றிய தனது ஆராய்ச்சியில், "இயற்கை விதிகள்" பற்றிய கிரேக்கத் தத்துவாசிரியர்களின் சிந்தனைப் படைப்புக்களை, தனக்கே உரித்தான ஆற்றொழுக்கு நடையில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இயற்கை விதிகளைப் பற்றிய அத்தகைய தத்துவத்தினின்று, ஒரு அரசின் அறநெறி பற்றியும், அதன் நிலைத்தை பற்றியும், உண்மையான ஒரு அரசியல் சமுதாயத்தில் மக்களின மகத்தான தலைமை பற்றியும், அத்தகைய அரசியல் சமுதாய மக்கட் குழுவினுக்கிடையில் வேண்டப்படும் அவசியமானதும் சட்ட ரீதியானதுமான சமத்துவத்தைப் பற்றியும், தனது ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டெடுத்த பல அரசியல்

முடிவுகளை நமக்கு வழங்கியுள்ளார். இவ்வாறு அவர் ஒரு அரசுக்குச் சிறப்பாக வேண்டப்படும் நீதி, நேர்மை பற்றியும்—சமூக, அறநெறி பற்றியும் அளித்துள்ள கருத்துக்களே, அவர் அரசியல் வளர்ச்சிக்குத் தந்துள்ள "மாபெருங் கொடை" என்னலாம். இடைக் காலத்தில் அவரது நூல்கள், அரசியல் வல்லுநர்களால் விரும்பிக் கற்கப்பட்டதுடன், மேற்கோள்களாகவும் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டன என்பது வெளிப்படை. இந்த இடைக் காலத்திலேயேதான் சிசிரோவின் கருத்துக்கள், கிறித்துவச் சர்ச்சுகளின் சமூகக் கொள்கைகளிடை அமிழ்ந்துவிட்டன என்று கூறப்படுகிறது.

உலகைத் திருத்துதற்கு முனையும் உத்தமர்கள் எவ்வாறு அப்பணிக்காகத் தத்தமது ஆவியைத் தியாகம் செய்ய வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்படுகிறார்களோ, அதே நிலைதான் சிசிரோவின் வாழ்க்கை வரலாற்றிலேயும் நாம் காண்கிறோம். மேதக்க ரோமானிய நாட்டிற் தோன்றி, அரசியல் வாழ்வை ஏற்றுக்கொண்டு, அவ்வரசியல் வெள்ளத்திலேயே தன் இன்னுயிரை நீத்த மாபெருந் தியாகிதான் சிசிரோ! சிசிரோ, கட்சிப் பூசலொன்றில் தன் ஆருயிரை இழந்தாரெனினும், அவர் இன்னும் தனது நூல்களின் வடிவத்திலே உலக மக்கள் நெஞ்சங்களில் நடம் புரிகிறார். கால வெள்ளம் வேண்டுமானால், கலைஞரை - கவிஞரை - அரசியல் மேதைகளை அழித்திடக்கூடும்! ஆனால் அவர்கள் உலகுக்கு அளித்துச் செல்லும் உயர்ந்த கருத்துக்களும், தத்துவங்களும் கலைச் செல்வங்களும் என்றும் நின்று நிலைத்து நமக்கு மகிழ் ஊட்டுவன அன்றோ? ❋

---

## வருந்துகிறோம்

கழிந்த 1—6—58 அன்று, தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் தாய் மாமனாரும், தமக்கையாரின் கொழுநருமான திரு. வி. ஆர். இராசகோபால் அவர்கள் சிலநாட்கள் நோய்வாய்ப்பட்டுத் தமது 63-ம் அகவையில் வேலூர் மருத்துவ மனையிலேயே இயற்கை எய்தினார். அன்னாரைப் பிரிந்து வாடும் சுற்றத்தார்க்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதையும் தன் விரலசைவில் ஆடும்படிச் செய்யலானான். சார்லஸ் மன்னனின் சிரம் கொய்யப்பட்ட பிறகு, இங்கிலாந்தில் யார் ஆள்வது எனகிற குழப்பம் ஏற்பட்டபோது, ஒருவன் தோன்றினான்! பார்லிமெண்டுக்குத் தலைமை வகித்து மன்னனின் மணிமுடியை அறுத்துத் தள்ளக் காரணமான ஆலிவர் கிராம்வெல் தான் அவன்!! அவன் தனது வீரதீரங்களையும், வெற்றிக் குணத்தையும் முதலாக வைத்து, (Lord Protector) எனும் திருநாமம் பூண்டு, ஆட்சியை நிறுவினான். அதாவது மன்னனிருந்த இடத்தில், இவன் அமர்ந்தான்! வல்லவனாகவும் நல்லவனாகவும் இருந்ததால், இவன் ஆட்சியில், கெடுதல் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் இவனைச் சுற்றியிருந்தோர் அனைவரும், கைவசம் கிடைத்த அதிகாரத்தைத் தத்தமது சுயநலத்துக்குப் பயன்படுத்தலாயினர். எனவே, அவன் இறந்த பிறகு, இங்கிலாந்தில் இந்த ஆட்சி முறை ஒழிந்து, இப்படி ஒரு தனி நபரை பெரியவனாக்குவது தீது எனும் எண்ணம் மலர்ந்து, இப்போதுள்ள ஆட்சி முறை அரும்பலாயிற்று!! இங்கிலாந்து கண்ட இதே பாடத்தை, பிரான்சும் சந்தித்தது - பிரான்சில், லூயி மன்னனின் சிரம் கொய்தனர், மக்கள். மன்னனை ஒழித்த புது ஆனந்தத்தில் தலைகால் தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்த பிரெஞ்சு மக்களின் மத்தியிலே, நெபோலியன் தோன்றினான்!! பிரெஞ்சுப் படையிலே சாதாரண தளபதியாகயிருந்து, ஒரு சில வெற்றிகளைப் பெற்றுக் காட்டியதன் மூலம், தன்னை "வெற்றி வீரன்" என்று நிரூபித்துக் கொண்ட இவனை பாரிஸ், கோபுரத்திலேற்றிற்று—கொண்டாடிற்று. கொந்தளிக்கும் கடலில் சிக்கிய கலத்துக்கு ஒரு கலங்கரை விளக்கம் எனக் கருதப்பட்டான்! முடியரசு ஒழிந்த பிரான்சில், நெபோலியன் அரசு ஏற்பட்டது. அவனுடைய வீரக்காதைகளும், வெற்றிக் குறிப்புகளும் மக்கள் மன்றத்தில் பரவிக்கொண்டிருந்த அதே நேரத்தில், இவன் ஆட்சியைத் தன்னுடையதாக்கிக் கொண்டிருந்தான். ஒரு சில ஆண்டுகளுக்குள், சர்வாதிகாரியானான். லூயி, மன்னன்! இவன் மக்கள் மத்தியிலிருந்து வந்த தலைவன்!! இந்த ஒரு வேற்றுமை தவிர, உண்மையான மக்களாட்சி மலரவில்லை. இதே கதிதான், ஏழையின் மகனாகப் பிறந்து, ஏற்றம் பெற்ற ஹிட்லரைத் தலைவனாக ஏற்றுக்கொண்ட ஜெர்மனிக்கு ஏற்பட்டது. முசோலினியை ஏக தலைவன் என்று எண்ணிய இத்தாலிக்கு உண்டாயிற்று. நெபோலியன் - ஹிட்லர் - முசோலினி - ஸ்பெயின் நாட்டில் விளங்கும் பிராங்கோ ஆகியவர்களெல்லாம், சர்வாதிகாரிகள் ஆவார்கள்! முடியரசு கவிழ்ந்தும், மக்களாட்சியின் போர்வையில், மணிமுடிதாரிகளானவர்கள் இவர்கள்.

ஹிட்லரின் ஆட்சியில் ஜெர்மனி என்ன பாடுபட்டதென்பதை அனைவரும் அறிவர். தன்னாட்டில் ஒலி பரப்பப்படும் வானொலியையன்றி, வேறுநாட்டு ஒலிபரப்பு எதையும் கேட்டால் தண்டனையுண்டு என்கிற அளவுக்கு, மக்களுரிமைக்கு உலைவைத்தான். முசோலினி, இத்தாலியில் படிக்கும் ஒவ்வொரு சிறு குழந்தையும் துப்பாக்கி வைத்திருக்க வேண்டும் என்று சொன்னான். பிராங்கோ ஆளும் ஸ்பெயின், இன்று எப்படியிருக்கிறது என்பதைப் பலரும் அறிவர்!!

* * *

"கத்தரிக்காயே சமைத்துத் தின்னவேண்டும்," என்று ஒரு அரசு எல்லோர்மீதும் நெருக்கடியை உண்டாக்கினால், வாய்விட்டுச் சிரிப்போம் முதலில்! பிறகு, வயிற்றெரிச்சல், கிளம்பி, கிளர்ச்சியில்போய் முடியும்!! ஹிட்லர், முசோலினி, போன்றவர்கள் இப்படித் தத்தமது விருப்பப்படி ஒரு நாட்டை ஆட்டிப் படைத்த சர்வாதிகாரிகள் ஆவார்கள். இந்தச் சர்வாதிகாரப் பாதை, முடியரசின் மாற்றுருவேயன்றி வேறல்ல என்பதால் தான், ஜனநாயகம் விரும்பிகள், எந்த இடத்தில் சர்வாதிகாரம் முகிழ்த்தாலும், வருந்தவும் எச்சரிக்கவும் செய்கின்றனர்.

சர்வாதிகாரிகளுள்ள நாட்டில் கூட பார்லிமெண்டு என்று ஒன்று இருக்கக்கூடும். ஆனால், அது "ஆமாம் சாமி" போடுவதாக யிருக்குமே ஒழிய, விவாதித்து முடிவு கட்டும் ஜனநாயகப் பார்லிமெண்டாக யிருக்காது. சட்ட மன்றம் இருப்பதும், அங்கு

பிரச்சனைகள் விவாதிக்கப்படுவதும், பிறகு முடிவெடுக்கப்படுவதும் ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களாகும். இந்த உரிமைகள், சர்வாதிகாரப் போக்கில் கிட்டாது! வல்லான் வகுத்ததே வழியென ஆகும்!!

*

ஜனநாயகத்துக்கு அடிப்பீடம் பார்லிமெண்டரி முறையாகும். பார்லிமெண்டரி முறை சரியாக இயங்கவேண்டுவதற்குத்தான் அரசியல் கட்சிகள் தேவைப்படுகின்றன. அந்த அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் பலதரப்பட்ட கொள்கைகள் இருக்கலாம். அவை ஒவ்வொன்றும் தத்தமது கொள்கைகளே நல்லது என வாதிக்கலாம். சந்தைக்குச் சென்ற நாம் எது நல்லது என்று பார்த்துத்தானே வாங்குகிறோம்! அதைப்போல, எந்தக் கொள்கை திடமானது—நாட்டுக்குத் தேவையானது—என்று மக்கள் மன்றம் கருதுகிறதோ, அந்தக் கட்சிக்கு வாக்களித்து, ஆளுங் கட்சியாக ஆக்கிக்கொள்ளுகிறது. ஆளுங் கட்சியாக ஆனாலும், அக்கட்சி நாட்டு நலனுக்கு ஊறு விளைக்காத வகையில் நடக்கிறதா என்று கண் காணிக்கவும், தவறு செய்தால் இடித்துரைத்துக் கண்டிக்கவுமான "லகானாக", எதிர்க்கட்சி இயங்குகிறது. எப்படி ஒவ்வொரு கட்சிக்கும் தனது கருத்தை வலியுறுத்த உரிமையுண்டோ, அதேபோல ஒன்றுக்கொன்று கருத்து விமர்சனம் செய்யவும் சந்தர்ப்பம் நேரும்போது, நாட்டின் முக்கியப் பிரச்சினைகளில் ஒத்துப்போகவும், ஜனநாயகப் பாதையில் இடமுண்டு.

ஆளுங் கட்சியும், அதைத் தட்டிக்கேட்க பலமான எதிர்க்கட்சியும் இருப்பதுதான் ஜனநாயகத்துக்குத் தெம்பூட்டுவதாகும். கத்தரிக்காய் — வெண்டைக்காய் — அவரை — துவரை என்று பல இருந்தால்தான், எதையாவது ஒன்றை நாம் வாங்கமுடியும். எல்லோரும் அவரையைத்தான் வாங்கவேண்டும் என்று, அவரையை மட்டும் கொண்டுவந்து விற்ருல், என்னசெய்ய முடியும்? பலபொருள் இருந்தால்தான் எது நல்லது என்று தேர்ந்தெடுக்க முடியும்! மாற்றுக் கட்சிகள் இருந்தால்தான், எது நல்லது என்று எடைபோடவும், அதைத் தேர்ந்தெடுக்கவும் மக்கள் மன்றத்துக்கு இயலும்.

விவாதித்து முடிவெடுப்பது என்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும்! விவாதித்து முடிவெடுக்க, மாற்றுக் கட்சிகள் இல்லாமல் இயலுமோ? எனவேதான், பல அறிஞர்கள், மாற்றுக் கட்சியின் அவசியத்தை அடிக்கடி எடுத்துரைத்து வருகின்றனர்.

*

சர்வாதிகாரப் பாதையில், மாற்றுக் கட்சிகளுக்கே இடம் கிடையாது! அந்நிலைமை ஏற்படும்போது, ஏக மனிதன் ஆட்சியே ஏற்பட்டு, பழைய நிலைமையே திரும்பும். அதனுல்தான் எங்காவது, ஒரே மனிதன் ஆட்சி உருவாகிறதென்ருல், உலகத்தில் அச்சமும் ஐயமும் ஏற்படுகிறது. பிரான்ஸ் மக்களாட்சிக்கு உரம்போட்ட நாடு. அங்குதான், சமத்துவம்—சகோதரத்துவம்—சுதந்திரம் எனும் உரிமைக் கீதம் எழும்பிற்று. வால்டேர், ரூசோ போன்ற சிந்தனைச் சிற்பிகள் சிந்துபாடிய கூடம் அது! ஆனுல் அங்கே—பிரான்சின் தலைநகரான பாரிஸ்மா நகரில் கடந்த சில நாட்களாக நாம் காணும் காட்சியென்ன? ஜனநாயகம், தூக்கியெறியப்பட்டு, சர்வாதிகாரத்துக்கு தாம்பூலம் வைக்கப்பட்டிருக்கிறது! ஜெனரல் டிகாலே என்பாரை, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சிற்றூரிலிருந்து நகரத்துக்கு இட்டு வந்து, நாட்டின் நாயகராக ஆக்கியிருக்கிருர்கள். ஒருபக்கம் இந்த முயற்சிக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தபோதினும், இன்னெரு பக்கம் டிகாலேயிடமே ஆட்சியிருக்க வேண்டுமெனக் கூப்பாடு போடுவோரும் இல்லாமலில்லை. டிகாலே, கடந்த உலகப்போரின் போது பணிபுரிந்த வீரத் தளபதி! ஆனுல், அரசுத்துறையில் மிகவும் பிற்போக்கான இலட்சியங்களைக் கொண்டவர்!!

அவர் வசம், பிரதமர் பொறுப்பு அளிக்கப்பட்டதும், அவர் விடுத்த முதல் வாசகம், "இன்னும் ஆறுமாத காலத்துக்கு, நான் வைத்ததுதான் சட்டம். அதுவரையில் பார்லிமெண்டு கூடக்கூடாது," என்பதுதான். அதாவது, இன்னும் ஆறுமாத காலத்துக்கு அவர்தான் ஜாரி—அவர்தான் நெப்போலியன். இந்த நிபந்தனைக்கும் சரியென்றே பிரெஞ்சுப் பாராளுமன்றம் ஒப்பியிருக்கிறது!!

காரணம் என்ன? பிரெஞ்சு நாட்டில் வாழும் பிரபுக்கள்-பிற்போக்கு வாதிகள் — இன்னும் ஆதிக்க ஆசை கொண்டோராகவேயுள்ளனர்! அதன் காரணமாக என்றே ஒரு காலத்தில் அவர்கள் வசமான அல்ஜீரியா போன்ற அராபிய நாடுகளைத் நமது பிடிப்பிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. அதே சமயத்தில், அல்ஜீரியாவில் நடைபெறும் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்கலாம் எனிலோ; பாரிஸ்மா நகரில் பீடமேறும் எந்த மந்திரி சபையும் எத்தனை நாள் நீடிக்கும் என்று சொல்ல முடியாத நிலை. காலையில் ஒரு ஆட்சி, நண்பகலில் இன்னெரு பிரதமர், மாலையில் மற்ருெரு முதலமைச்சர் என்று கடந்த பல ஆண்டுகளாகப் படாதபாடுபட்டு வருகிறது. இந்த அலங்கோலத்தைக்கண்டு மக்கள் மனங் குமுறுவது ஒருபுறமிருக்க, இராணுவத்தினருக்குப் புதுத் தைரியம்வந்துவிட்டது. நமது வசமிருக்கும் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கொண்டு நாமே நடவடிக்கையெடுத்தால் யார் தட்டிக்கேட்க முடியும்? அப்படித் தட்டிக்கேட்க கூடிய அளவுக்கு வலிவுள்ள அரசாங்கமோ, பாரிசில் கிடையாது. ஒரு வேளை அப்படித் தட்டிக் கேட்டாலும், "முடியாது" என்று மறுத்தால் அவர்களால் என்ன செய்யமுடியும்? என்கிற தைரியம் வந்துவிட்டது, தளபதிகளுக்கு. அவர்கள், அல்ஜீரியாவில் தமது முயற்சியைத் துவக்கினர். பாரிஸ், மிரண்டது! சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாருங்கள் — இன்றேல் இதே கதிதான் உங்கட்கும் என்று அல்ஜீரியத் தளபதிகள் சொல்லாமல் சொல்லினர். பாரிஸ் நடுங்கிற்று! பிரெஞ்சுப் படையில் இன்று தளகர்த்தர்களாக இருக்கும் பலர் டிகாலேக்குக் கீழ்ப்பணியாற்றியவர்களாகும். அதனுல், அவர்கள் மத்தியில் டிகாலேக்கு செல்வாக்குண்டு அவர்கள், பிரான்சை நடத்திச் செல்லக்கூடிய ஒரே நபர் டிகாலேதான் என்றனர். எங்கோ ஒரு சிற்றூரில், எதையும் மறந்தவராய்க்கிடந்த, டிகாலேக்கு "சான்சு" அடித்தது! அவர் அழைத்துவரப்பட்டு, பாரிஸ் பீடத்திலிருந்து ஆளும் அந்தஸ்து பெற்றுவிட்டார்!!

நாட்டின் விஷயங்களில், இராணுவம் தலையிடுவதென்பது, நல்லதல்ல. ஆனுல் நாடாளும் கட்சியே வலிவற்றுப் போய்விட்டதெனின்,

பிறகென்ன செய்ய முடியும்? கடந்த சில ஆண்டுகளாக, ஒரு நாட்டின் தலைவிதியைத் திடீரென மாற்றவும், கவிழ்க்கவுமான காரியத்தை இராணுவ ஜெனரல்களே செய்து வருகின்றனர். நெபோலியனும், ஹிட்லரும், முசோலினியும், பிராங்கோவும் இப்படி படையிலிருந்து வந்து பிறகு சர்வாதிகாரியாக ஆனவர்கள் தான். எகிப்து நாட்டில் முடியாட்சி கவிழ்க்கப்பட்டு, பரூக் மன்னன் வெளியேற்றப்பட்டு, ஜெனரல் நகிப் ஆட்சிப் பொறுப்பை யேற்ற போது—"என்னடா, ஒரு படைத் தளபதி ஆள வருகிருரே!", எனும் அச்சம் உலகுக்கு ஏற்படத் தான் செய்தது. அந்த அச்சம், இன்றுள்ள ஜெனரல் நாசர் விஷயத்திலும் பலருக்கு, இன்னும் இருக்கத்தான் செய்கிறது. இந் நிலையில், ஜெனரல் டிகாலே, 'சர்வாதிகாரி' எனும் நிலையிலே பிரெஞ்சின் பீடத்திலேறி யிருக்கிருர்! எதிர்காலம் பற்றியும், ஜனநாயக வளர்ச்சி குறித்தும் எண்ணுவோருக்கு, இராணுவ மூலம் அரசியல் மாறுதல்கள் உருவாவது பற்றி கவலை ஏற்படத்தான் செய்யும்!!

•

பிரான்சு ஏன் இந்தக் கட்டத்துக்கு வந்தது—ஏன், பல நாடுகளில் ஜனநாயகம் இப்படி திசை மாறிச் செல்கிறது—என்று கேள்வி எழக்கூடும்.

மாஸ்கோ மனைத்தைச் சுட்டிக் காட்டி, இன்றுள்ள ஜனநாயகத்தின் ஏற்றம் இறக்கம் பற்றி விமர்சனம் செய்யவும் பலர் முன் வரக்கூடும்.

ரோஜா, நல்லதுதான்! ஆனுல், அது யார் கையிலிருக்கிறது என்பதைப் பொருத்துத்தானே அழகும் மதிப்பும் ஏற்பட முடியும். கனிரசவல்லியின் கரத்திலிருப்பதற்கும், காட்டெருமையின் காலில் இடப்படுவதற்கும் வித்தியாசமுண்டன்ருே? ஜனநாயகம்—பார்லிமெண்டரி முறை—எல்லாம் நல்லதுதான்! ஆனுல், ஜனநாயகம் தழைக்கும்படிச் செய்யவேண்டிய பார்லிமெண்டுக்கு, இன்னும் உண்மையான மக்கள் பிரதிநிதி போகும் வாய்ப்பு ஏற்படவில்லை. "உண்மையான" என்ருல், கருத்துக்களை அலசி, அதன் அடிப்படையில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை மலரவில்லை. வசதி படைத்தோர், சீமான்கள் முதலியோரே ஏராளமாகப் பணம் செலவிட்டு, இடம்பெறுகின்றனர்! இந்தக் காரணத்தாலேயே, இன்று பிரான்சில், பல பிற்போக்குவாதிகள் அரசியல் அரங்கில் இருக்கின்றனர், ஆட்டிப் படைக்கவும் செய்கின்றனர். பிரான்சிலென்ன, இங்குகூட அதனுல்தானே பலர் காங்கிரசில் எம். பி.க்களாகவும் எம். எல். ஏக்களாகவும் உள்ளனர்!

பணம் படைத்தோரும், சீமான்களும் எப்போதும் சுயநலவாதிகளாகவும், சுயநலம் பாதிக்கப்படும்போது கூடுவிட்டு கூடு பாயத் தயங்காதவர்களாகவும் தான் இருப்பார்கள். நாட்டு நலனைவிட, தங்கள் நலனே அவர்கட்குப் பெரிதாகும். "பணம்" அவர்கள் வசம் இருக்கிற காரணத்தால், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய இடங்களுக்கு அவர்களே போய் அமர்ந்துகொள்ளுகிருர்கள்! தமது இலாபத்துக்காக, யாரைத் துதித்தால் நல்லதோ, அவரைத் துதிக்கவும், அதன் மூலம் தூக்கி யெறியப்படும் பதவித் துண்டைப் பதம் பார்க்கவும் முற்படுகிருர்கள். இதனுல், மக்களாட்சியின் மாண்பு சிதைகிறது. பாரிஸ்லீலைக்கு, முக்கிய காரணம் இதுதான். இந்த நிலை மாறி, கொள்கையின் அடிப் படையில், பிரதிநிதிகள் போகும் காலம் வரவேண்டும். பணம் படைத்தோருக்கன்றி, குணம் கொண்டோருக்கெல்லாம்; சீமான்களுக்கு அன்றி, சிறந்த கொள்கையுடைய கட்சிகளுக்கெல்லாம்; பார்லிமெண்டுக்குள் நுழையும் நிலை வரவேண்டும். அப்போது தான், ரோஜா கசங்காது! உலக அறிஞர்கள் ஒப்பற்றதெனக் கூறிடும், "மக்களாட்சி முறை" மணக்கும். சர்வாதிகாரமும், ஒரே மனித வழிபாடும் ஒழியும்.

★


★ விருத்தாசலத்துக்கு வருக!

தென்னுற்காடு மாவட்ட தி. மு. க. மாநாடு

ஜூன் 7, 8 தேதிகளில்

தலைவர்: மதுரை முத்து,

திறப்பாளர்: குடந்தை கே. கே. நீலமேகம்

அண்ணு, பொதுச்செயலாளர்

கழகக் காவலர்கள் அனைவரும் வருகை தருவர்.

அலீபா இன்னிசையும், மல்லிகா நடன விழாவும் நடைபெறும்.

தாயகத்தோரே அன்புடன் அழைக்கிருேம்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. வ. கு. தலைவர். | எம். செல்வராஜ், எம். எல். ஏ. பொருளாளர்.

சி. முனுசாமி, சி. நடராசன், எம். எல். ஏ. | ஜி. சொக்கலிங்கம், எம். ஆனந்தன், எம். எல். ஏ. செயலாளர்கள்.

தெ. பிச்சமுத்து, பா. குப்புசாமி, தொ. ப. தலைவர்கள்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... { அலுவலகம்: 15 [illegible] இல்லம்... 118 [illegible]

# The School of English Learning

# ஆங்கிலக் கல்வி நிலயம்

60, பிராட்வே, சென்னை-1.

## ஓர் நற்செய்தி!

இங்கிலீஷ் போதிப்பதில் தனிப்பட்ட சாதனையைச் செய்து காட்டிவரும் எங்கள் கல்வி நிலயம் எஸ். எஸ். எல். சி. -இல் தவறிய மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க முன்வந்திருக்கிறது.

**இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்.**

**உடனே சேருக!** **உடனே சேருக!!**

# S. S. L. C.

## அக்டோபர் 1958

**பரீட்சைக்கு நேரில் படிக்க**

## எங்கள் சாதனைகள்:

★ வேறு எங்குமே காணமுடியாத ஒப்பற்ற இங்கிலீஷ் இலக்கணப் பயிற்சி

★ எளிய முறையில் அளிக்கப்படும் கணிதப் பயிற்சி

★ இரசாயனக் கூடம் (LABORATORY) வசதிகள்

★ ஆற்றலும் ஆர்வமும் மிக்க ஆசிரியக் குழு

★ எளிய முறையில் தயாரித்து அளிக்கப்படும் பாடக் குறிப்புகள்.

முக்கிய அறிவிப்பு:- பெண்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

காஞ்சீபுரம், 93, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் [illegible] வெளியிடப்படுகிறது.